Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

IIS இன்
கணனிக் கற்கைநெறிகளுக்கான
மாபெரும் புலமைப்பரிசில்திட்டம்-2003
விபரங்களும் விண்ணப்பப்படிவங்களும் IIS அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்
விண்ணப்ப முடிவுத் திகதி : 15.11.2002
சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள் !
கணனிக்கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக் கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 ஐப்பசி 9 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷ:பான் 19 (26.10.2002) சனிக்கிழமை இதழ் : 26

கூட்டுச் செயலணிக்குழு ☼ மீளக்குடியேற்றம் ☼ போர்நிறுத்த நடைமுறைகள்

# மூன்று முக்கிய விடயங்கள் இரண்டாம் கட்டப் பேச்சில்

## செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

**அரசு - புலிகள் கூட்டுச் செயலணிக்குழு அமைத்தல், இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியேற்றல், மற்றும் போர் நிறுத்த நடைமுறைகளை கண்காணித்தல் போன்ற மூன்று முக்கிய விடயங்கள் இரண்டாம் கட்டப் பேச்சுக்களின் போது ஆராயப்படும் என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.**



தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையில் இடம்பெறவுள்ள இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்கு மிகவுறுதியான அடித்தளம் இடப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான விடயங்களை வெளியிடும் போது இதனைத் தெரிவித்தார்.

தாய்லாந்தில் ஒக்ரோபர் 31ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் மூன்று முக்கிய விடயங்கள் மீது பூரண கவனம் செலுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.


முதலாவது முக்கிய விடயம்- கூட்டு நடவடிக்கைச் செயலணி அமைத்தல் என்பது தொடர்பானதாகும் என அமைச்சர் கூறினார்.

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நவம்பர் 25ஆம் திகதி நடைபெறவுள்ள, புனர்வாழ்வு - புனரமைப்பு - அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவி வழங்கும் நாடுகளின் உச்சி மாநாட்டுக்கு முன்பதாக கூட்டு நடவடிக்கைச் செயலணி அமைக்கப்பட வேண்டியுள்ளது.

ஏனெனில் - உதவி வழங்கும்

(10ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்



மழை முழக்கத்தோட முழங்கினதில சனமெல்லே கதிகலங்கினது....

## கடற்படைப் பயிற்சி கண்காணிப்புக் குழுவுக்குத் தெரியாது

(நமது நிருபர்)

நெடுந்தீவுக் கடலில் நேற்று அதிகாலை இடம்பெற்ற கடற்படையினரின் பயிற்சி நடவடிக்கைகள் குறித்துத் தமக்கு எந்தத் தகவலும் வழங்கப்படவில்லை என இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலக பதில் தலைவரான பெர்கான் டெர்ஸ்கார்விக் தெரிவித்துள்ளார்.

நேற்று அதிகாலை தீவகப் பகுதியில் கேட்ட பலத்த வெடிச் சத்தங்களால் யாழ்.நகரத்தை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பதற்

(10ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுச் செயலணிக்கு எதிராக ஜனாதிபதி நீதிமன்று செல்வார்?

### கதிர்காமர் வழக்குத் தொடர்வாராம்

(கொழும்பிலிருந்து அருள்)

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் இணைந்து அமைக்கவுள்ள உத்தேச கூட்டுச் செயலணிக் குழுவுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தயாராகி வருவதாக அவருக்கு நெருங்கிய வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இது தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் வழக்கொன்றை அடுத்த வாரமளவில் தாக்கல் செய்வது தொடர்பாக அவர் தனது ஆலோசகர்களுடன் கலந்தாலோசித்து வருவதாகவும் -

சந்திரிகாவின் அமைச்சரவையில் முக்கிய பொறுப்பு வகித்தவரும் அவரது நம்பிக்கைக்குரியவர் எனக் கருதப்படுபவருமான லக்ஷ்மன் கதிர்காமர் மூலமே இவ் வழக்கினைத் தாக்கல் செய்வது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

உத்தேச கூட்டுச் செயலணிகளோ அல்லது வேறு எத்தகைய அதிகார அமைப்புக்களோ தனது அதிகாரத்தின் கீழேயே வர வேண்டும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கருதுவதாக அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.



இதேவேளை, கூட்டுச் செயலணிக குழுவானது தனிநாடொன்றை நோக்

(10ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.தளபதி கருணா வன்னிக்கு சென்றார்



மட்டக்களப்பு - அம்பாறை சிறப்புத்தளபதி கேணல் கருணா தாய்லாந்து பேச்சுக்களில் கலந்து கொள்ளும் புலிகள் தரப்புக் குழுவில் இணைந்து கொள்ளும் பொருட்டு மட்டக்களப்பிலிருந்து வன்னி சென்றுள்ளார்.

தரை மார்க்கமாக கடும் பாதுகாப்புடன் இவர் வன்னி சென்றடைந்துள்ளார். இரண்டாம் கட்டமாக தாய்லாந்தில் அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள பேச்சு வார்த்தையில் புலிகள் தரப்புக் குழுவில் கேணல் கருணாவும் கலந்து கொள்ளவுள்ளமை தெரிந்ததே.

## அரச தரப்புக் குழுவில் மேஜர் ஜென.கொட்டேகொட

(கொழும்பு)



இரண்டாம் கட்டப் பேச்சுக்களுக்காக தாய்லாந்து செல்லும் அரச குழுவில் இம்முறை இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொடவும் இடம்பெறுகிறார்.

தாய்லாந்தில் இடம்பெறவுள்ள இரண்டாம் சுற்றுப்பேச்சுக்களில் பங்குபற்றவுள்ள அணியில், முதலாம் சுற்றுப்பேச்சுக்களில் பங்குபற்றிய அனைவரும் அரச குழுவில் இடம்பெறுவர் என்று அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இவர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கு வளஆளணிக்குழுவொன்றும் மேலதிகமாக தாய்லாந்து செல்லவுள்ளது. அவ்வள ஆளணிக்குழுவும், அரச தரப்பு அணியுடன் பேச்சுக்களின் போது உடனிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வள ஆளணிக்குழுவில் இராணுவரீதியான விவகாரங்களில் ஆலோசனை வழங்க இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் சாந்த

(10ஆம் பக்கம் பார்க்க)

## திருமலைக் கடலில் தத்தளித்த ஆறு இந்திய மீனவர்கள் மீட்பு

(திருமலை)

திருகோணமலைக் கடலில் தத்தளித்த ஆறு இந்திய மீனவர்கள் இலங்கை மீனவர்களால் காப்பாற்றப்பட்டுள்ளனர். நேற்று மீட்கப்பட்ட இந்த இந்திய மீனவர்கள் ஆறு பேரும் திருமலை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டு தற்போது நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு கடலூரைச் சேர்ந்த எம்.ரவீந்திரன் (38), சி.மணிமாறன் (32), ஆர்.நாகலிங்கம் (31), கே.வேலாயுதம் (48), ஆர்.ராஜேந்திரன்(34), எஸ்.ராஜேந்திரன் (40), ஆகிய அறுவரும் 'வீரன் துணை' என்ற 50 அடி நீளமான படகில் மீன்பிடிக்கக் கிளம்பி, இடைநடுவில் படகு பழுதடைந்த நிலையில் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தனர். தாம் கொண்டு வந்த உணவுப் பொருட்கள் முடிவடைந்த நிலையில் பிடித்து வைத்திருந்த மீன்களையே இவர்கள் உண்ண நேர்ந்தது.



நேற்று முன்தினம் மாலை இவர்கள் இலங்கை மீன்பிடிப் படகு ஒன்றைக் கண்டு உதவி கேட்டு சைகை செய்தனர். இந்திய மீனவர்கள் வந்த படகு நீளமானது என்பதால் தம்மால் அந்தப்படகை கட்டி இழுத்துச் செல்ல முடியாது என இலங்கை மீனவர்கள் தெரிவிக்கவே தமது படகிலிருந்து இலங்கை மீனவர்களின் படகில் ஏறிக்கொண்டனர்.

இவர்கள் பற்றிய விபரங்கள் திருகோணமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மூலமாக இந்திய தூதரகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் பருத்தித்துறைக் கடலில் இவ்வாறு தத்தளித்த ஐந்து இந்திய மீனவர்கள் காப்பாற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

உள்ளே - இன்றைய சிறப்பிதழ் சிறுவர் அரங்கம், "ஹிரு" பத்திரிகையாளரின் உரை

# நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் மீளக் குடியமர்ந்தோருக்கு ரூபா 65 ஆயிரம்!

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டவர்களில் யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து மீளக் குடியமர்ந்த - மாதாந்தம் 1500 ரூபாவிற்கு குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிற்கு-ஒன்றிணைக்கப்பட்ட உதவித் திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்கப்படவுள்ளது. வீட்டிற்கு ஏற்பட்ட அழிவின் நிலைமையை அடிப்படையாகக் கொண்டு அறுபத்தையாயிரம் ரூபா உச்சக் கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் ஏ-9 யாழ். கண்டி வீதி திறக்கப்பட்ட பின் 7-12 வருடங்களிற்குப் பின்னர் மீளக் குடியமர்ந்தவர்களிற்கு முன்னுரிமை அடிப்படையில் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளது எனவும் நிரந்தர வீட்டுக்கான உதவிக் கொடுப்பனவு தவிர்ந்த ஏனைய-தற்காலிக வதிவிட அமைப்பு, உபகரணங்கள் கொள்வனவு, மீளக்குடியமர்வுப்படி, உற்பத்தி முயற்சிக் கொடுப்பனவு ஆகிய 4 கொடுப்பனவுகளுக்குமான படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் ந.வேதநாயகன் கேட்டுள்ளார்.

# திருடியவர்கள் மத்தியில் சச்சரவு சந்தேக நபர்கள் இனங்காணப்பட்டனர்

சில நாட்களுக்கு முன் சங்கானையில் இரவு வேளையில் கடையை உடைத்து அங்கிருந்த பொருட்கள் திருடப்பட்டன. இதில் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பான விபரங்கள் அம்பலத்திற்கு வந்துள்ளன.

திருட்டுச் சம்பவத்தில் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களுக்குள் ஏற்பட்ட சச்சரவு காரணமாக இவ்விடயம் அம்பலத்திற்கு வந்துள்ளது. இச்சந்தேக நபர்களில் ஒருவர் முன்பு ஒரு திருட்டுச்சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (71)

# தென்மராட்சி வைத்தியசாலைகளை மீள இயக்குமாறு கோரிக்கை

தென்மராட்சி பிரதேசத்தில் அரசினர் வைத்தியசாலையில் மருந்தகங்களை மீள ஆரம்பிக்கப்படுவதன் அவசியம் குறித்து தென்மராட்சி மக்கள் நலச்சேவைகள் சங்கம் மாகாண பிரதிச்சுகாதார பணிப்பாளருக்கு மகஜர் ஒன்றினை அனுப்பியுள்ளது.

இதில் தென்மராட்சி மக்கள் முழு அளவில் மீளக்குடியமர்ந்து வருவதனால் சாவகச்சேரி உட்பட, வரணி, கொடிகாமம், கைதடி மத்திய மருந்தகங்களையும் உடன் இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அந்த மகஜரில் கோரப்பட்டுள்ளது. (25)

# சாவகச்சேரி வைத்தியசாலைக்கு நீர்த்தாங்கி அன்பளிப்பு.

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலைக்கு ஜி.ரீ.சற் நிறுவனத்தினால் 1000 லீற்றர் கொள்ளக் கூடிய நீர்த்தாங்கி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

தற்போது இவ் வைத்தியசாலையில் வெளி நோயாளர் பிரிவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதனால் பெருமளவு நோயாளர்கள் சிகிச்சை பெற வருவதைக் காணமுடிகிறது.

இவர்களின் குடிநீர்ப் பிரச்சினையை நீக்குமுகமாகவே இவ் நீர்த்தாங்கியை மேற்படி நிறுவனம் வழங்கியதாக வைத்திய அதிகாரி எஸ்.அம்பிகைபாகன் தெரிவித்துள்ளார்.

# யாழ்.பல்கலைக் கல்வியியல் புலத்தில் முதுதத்துவமாணி நேர்முகப்பரீட்சை!

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் உயர்பட்டப் படிப்புகள் பீடத்தினால் நடத்தப்பட்ட கல்வியியல் முதுதத்துவமாணி கற்கை நெறிக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் பெயர் விபரம் வெளியாகியுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு தோற்றவுள்ளோர் பட்டப்பின்படிப்புச் சான்றிதழ், பட்டபின் கல்வி டிப்ளோமா கற்கை நெறிச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், சேவைக்கால சான்றிதழ்களுடன் தவறாது சமுகமளிக்கும்படி உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தெரிவித்துள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரின் பெயர் விபரம் வருமாறு :-

ரீ.அல்பிரட், சி.அமிர்தலிங்கம், அ.ஆனந்தராஜா,கே.அருந்தவராஜா, என்.பாலச்சந்திரன், ரீ.பாலசுப்பிரமணியம், எஸ்.பாஸ்கரன், கே.பாஸ்கரன், ஏ.ச.எஸ்.கிறிஸ்ரோபர், ஏ.எம். குறூஸ், பி.ஜ.குறூஸ், எம் .ஆர்.பி குராடோ, கே.பிகுராடோ, சி.பிரான்ஸிஸ்சேவியர், ஜி.கணேசலிங்கம், டி.எஸ்.ஜோர்ஜ், வி.ஞானகாந்தன், என்.ஞானவேல், எம்.கௌரிகாந்தன், எம்.இக்னேசியஸ், எம்.இதயசிவதாஸ், வி.ஜெகநாதன், எம்.ஜெயக்குமார், பி.ஜெயரட்ணராஜா, கே.ஜெயதாஸ், எஸ்.ஜெயவீரசிங்கம், ஜே.கலாதரன், ரீ.கலைச்செல்வன், எஸ்.கனகலிங்கம், பி.கனகநாயகம், கே.கனகராஜா, கே.கந்தையா, வை.காசிப்பிள்ளை, எஸ்.கிருபாகரன், எஸ்.கலாகரன், கே.கிருஷ்ணகுமார், கே.கிருஷ்ணயோகன், கே.குலசேகரம், வி.குமரவேற்பிள்ளை, ஏ.மடுதீன்மிரல், ஆர்.மன்மதராஜன், ரீ.மரியசீலன், வி.மணிட்சிகந்தரம், எஸ்.மோகனராஜன், எம்.முரளிதரன், கே.முருகவேல், கே.முத்துக்கிருஷ்ணன் ஜே.நடராசா, ஆர்.நடராசா, எம்நாகராசா, எஸ்நாகராசா, ஜி.நாகராசா, எஸ்.நாகராசா, என்.நாகேந்திரன், சி.நாகேந்திரன், டி.நாகேந்திரன், சி.எம்.ச.எஸ்.நாகேஸ்வரன், எஸ்.நகுலேஸ்வரன், ஆர்.நமசிவாயம், கே.நிதித்தியானந்தம், சிவசித்திரா பழனி, எஸ்.பஞ்சரத்தினம், வி.பஞ்சாட்சரம், ரீ.பங்கயச்செல்வன், பி.கலைஅரசன், எஸ்.பிரேம்குமார், கே.பத்மகாந்தன், எம்.எம்.பிலிப்தம்பிராசா, கே.புஸ்பராசா, ஆர்.ராஜமகேந்திரன், வி.ஆர்.ராஜ்குமார், எஸ். இராமநாதன், எஸ்ரமேஷ், ஜி.இரத்தினசிங்கம், எம்.ரவீந்திரன், எஸ். ரேமண்ட்கூறைடாஸ், எஸ்.தேவமனோகரன், எஸ்.தேவசகாயம், கே.திலகநாதன், எஸ்.திருநாவுக்கரசு, பி.தியாகலிங்கம், எஸ். தியாகலிங்கம், ஈ.துரைசிங்கம், எஸ். உருத்திரகுமார், பி.பி.எம்.விக்ரர் லக்பேட், சி.விஜயசுந்திரன் அந்தோனிஸ், ஒ.விஜயரத்னம், எஸ்.விஜேந்திரசர்மா, வி.விபுதாசா, ஆர்.விவேகானந்தன், எஸ்.விவேகானந்தம், எம்.விவேகானந்தம், ஈ.எஸ். யோகேஸ்வரன், எம்.ஆனந்தராசா, எஸ்.உதயகுமார், என்.தெய்வேந்திரராசா, ஏ.ஜூராக்கியநாதன், எம்.கிறிஸ்ரியன், எஸ்.பத்மசீலன், ஜே.ஆர்.செபஸ்ரியாம்பிள்ளை, எஸ். சண்முகநாயகம், ஜே.சந்திரபிரகாசம், என்.சரவணபவன், கே.சரவணபவன், பி.சர்வானந்தன், கே.சசிதரன், பி.சத்தியநாதன், கே.சத்தியசீலன், ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை, பி.சற்குணநாதன், எஸ்.சயந்தன், கே.செல்வநாயகம், எல்.செல்வநாயகம், ஜே.சேதுராசா, எஸ்.சிறிதரன், எம்.சின்னையா, கே.சின்னராசா, கே.சின்னத்துரை, ஆர்.சிவகுமார், கே.சிவகுமார், பி.கே.சிவலிங்கம், எல்.ஏ.எஸ்.சிவலிங்கம், எஸ்.சிவநாதன், எஸ்.சிவனேசன், பி.சிவனேசன், என்.சிவனேசன், எஸ்.சிவபதம், எஸ்.சிவராசா, கே.சிவசுப்பிரமணியம், ஜி.சிவசுந்தரம், டி.எஸ். சொலமன், பி.சிறிதரன், கே.சிறிகந்தவேள், கே.சிறீனந்தகோபன், ரீ.சுபாகரன், வி.சுப்பிரமணியம், ஆர்.சுப்பிரமணியக்குருக்கள், வி.சுந்தரலிங்கம், ரீ.தனேஸ்வரன், ரீ.தவராசா, எஸ்.தயாபரன்.

# குடாநாட்டின் சாதனை விவசாயிகள் 36 பேருக்கு பரிசு வழங்கி கௌரவம்!

யாழ்.குடாநாட்டில் இந்த ஆண்டில் (2002) விவசாயச் செய்கையில் சாதனை படைத்த 36விவசாயிகள் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

புதிய விவசாய தொழில் நுட்பங்களையும், தாம் அறிந்த புதிய விடயங்களையும் ஏனைய விவசாயிகளுக்குப் புகட்டியதோடு, விவசாயச் செய்கையில் முழு நேர விவசாயியாகச் செயற்பட்டுத் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்ற இவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் உதவி விவசாயப் பணிப்பாளர், க.சின்னத்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் ஒவ்வொரு விவசாயப் போதனாசிரியர் பிரிவில் இருந்தும், நெற்செய்கை, உப உணவுப் பயிர்ச்செய்கை, வதிவிட வேளாண்மைச் செய்கை ஆகிய ஒவ்வொன்றிலும் ஒருவர் வீதம் 3 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மொத்தமாக தெரிவு செய்யப்பட்ட 36 விவசாயிகளே கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்தத் தெரிவினை அந்தப் பகுதி விவசாய போதனாசிரியர், பொறுப்பாக உத்தியோகத்தர், கால்நடை உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தகள் மேற்கொண்டனர்.

தெரிவுசெய்யப்பட்ட 36 விவசாயிகள் வருமாறு:

*புங்குடுதீவு*

நெல் - பொன்னுத்துரை (நயினாதீவு), உப உணவு- க.சத்தியகுமார் (நெடுந்தீவு), வதிவிட வேளாண்மை - கை.ஸ்ரீஸ்காந்தன் (புங்குடுதீவு),

*வேலணை*

நெல் - த. சிவகுமார் (காரைநகர்), உப உணவு -கா.தவபாலன் (சரவணை கிழக்கு), வதிவிட வேளாண்மை- த.மணிவண்ணன் (நாரந்தனை மத்தி),

*நல்லூர்*

நெல் - சிபுஸ்பராசா, உப உணவு -இரீஸ்கந்தராசா, வதிவிட வேளாண்மை - தெ.ஜீவரத்தினம்

*தொல்புரம்*

நெல் - ஆ.இராசதுரை சுழிபுரம் கிழக்கு, உப உணவு -ச.யோகேஸ்வரன் (சுழிபுரம் மேற்கு), வதிவிட வேளாண்மை - சேதுநாதமுத்து (அராலி மத்தி)

*உடுவில்*

நெல் - சே.சண்முகநாதன் (உடுவில் கிழக்கு), உப உணவு - சநிவரத்தினராசா (குப்பிளான் தெற்கு) வதிவிட வேளாண்மை - செ.தயாபரன் (இணுவில் கிழக்கு)

*சாவகச்சேரி*

நெல் -கதிரமாராசா (வரணி வடக்கு), உப உணவு - ந.தெய்வேந்திரம் (அல்லாரை வடக்கு), வதிவிட வேளாண்மை - பொ.ஸ்ரீகுமார் (கெற்பெலி மத்தி),

*கைதடி*

நெல் - வா.சின்னத்தம்பி (கைதடி வடக்கு), உப உணவு ந.சிங்கராசா (கைதடி வடக்கு), வதிவிட வேளாண்மை - ஆ.இராசரத்தினம் (கைதடி கிழக்கு)

*புத்தூர்*

நெல் - செ.பத்மநாதன் (காளியானை புத்தூர்), உப உணவு - ஐ.குணசேகரம் (சிறுப்பிட்டி மேற்கு நீர்வேலி), வதிவிட வேளாண்மை- மா.செல்லத்துரை (அச்சுவேலி தெற்கு),

*புலோலி*

நெல்- அ.அற்புத அருந்தவராசா பிலக்கடை (கரவெட்டி மத்தி), உப உணவு -து.துரைராசா (மயிலியதனை), வதிவிட வேளாண்மை - சிசிவயோகநாதன் (கரணவாய் கிழக்கு),

*அம்பன்*

நெல் - ப.ராஜ்குமார் (அம்பன்), உப உணவு - சி.பேரம்பலம் (தாழையடி), வதிவிட வேளாண்மை - ச.ஸ்ரீதரன் (குடத்தனை)

*கிரிமலை*

நெல் -நகுலநாதன் (அளவெட்டி), உப உணவு - சி.குணசேகரம் (அளவெட்டு), வதிவிட வேளாண்மை -ஆ.கதிர்வேலு (திரேசம்மா கோவிலடி சண்டிலிப்பாய்),

*உரும்பிராய்*

நெல் - செ.பரமநா தன் (குழுக்கண்டி ஒழுங்கை இரு பாலை கோப்பாய்), உப உணவு - த.இராமச்சந்திரன் (ஊரெழு கிழக்கு) சுன்னாகம், வதிவிட வேளாண்மை - து.இரத்தின சிங்கம் (இலகடி கோப்பாய் வடக்கு கோப்பாய்).


## சிறு விளம்பரம்

**(O/L) கணிதம்**

ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும் 37 வருட அனுபவமுடைய ஆசிரியரால் ஆரம்ப அறிவிலிருந்து சகல அலகுகளும் கற்பிக்கப்பட்டு மீட்டலுடன் வினா விடை வகுப்புகளும் 20 நாட்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் நிறைவேற்றப்படும்.

**க.ஆறுமுகநாதன்**
10,கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி. (020)

தமிழ்ப்பூங்கா (மல்ரி ஒவ் செற்) பதிப்பகம்
Thamil Poonga Multi offset Printers
பிரதான வீதி
Main St.
நெல்லியடி
Nelliady
கரவெட்டி
Karaveddy
தமிழ்ப்பூங்கா புத்தகசாலை
சி-088

யாழ்.நகரில் T.V.S. மோட்டார் சைக்கிள்களுக்கு
நீங்கள் நாடவேண்டிய ஒரே நிறுவனம்
**சுசுகி ரேடர்ஸ்**
57, 59 கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
விற்பனைக்குப் பிந்திய சேவை உத்தரவாதம்


## இன்றைய நாள் இனிய நாள்

**26.10.2002 - சனிக்கிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- தேகசுகம் நன்று,பணவரவு,குடும்பத்தில் சிறிய மனஸ்தாபம்,எடுத்த காரியம் வெற்றி,கல்விச் சமநிலை,வியாபாரம் முன்னேற்றம் |
| இடபம் | :- தேகசுகம் சமனிலை,வரவுக்கு மிஞ்சிய செலவு, தேவையற்ற வாக்கு வாதம்,கௌரவக்குறைவு,கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமனிலை. |
| மிதுனம் | :- தேகசுகம் நன்று,பணவரவு சமம்,மன அமைதி,தெய்வ வழிபாடு, கல்வி முன்னேற்றம்,வியாபார முன்னேற்றம். |
| கர்க்கடகம் | :- தேகசுகக்குறைவு,வீண்செலவு, தேவையற்ற வாக்கு வாதம், எடுத்த காரியம்தடை,கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| சிங்கம் | :- தேகசுகம் நன்று, பணவரவு,மகிழ்ச்சி,சுபகாரியங்களில் பங்கு, சமய அறிஞர் உறவு,கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| கன்னி | :- தேகசுகம் நன்று, பணவரவு,தொழில் முன்னேற்றம், சுபகாரியங்களில் பங்கு,பெண்கள் விதவிமான ஆடை அணிவதில் மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம்,வியாபார முன்னேற்றம். |

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரன் புத்திரர்
இ.வெங்கடேச ஐயர்.

| | |
|---|---|
| துலாம் | :- தேகசுகக்குறைவு, வைத்தியச் செலவு,பிதாவுடன் மனஸ்தாபம், எதிரி தொல்லை, கல்விச் சமனிலை,வியாபார முன்னேற்றம். |
| விருச்சிகம் | :- தேகசுகக்குறைவு,பணவரவு,புதிய காரியம் தொடங்குவது நன்றல்ல,கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம் குறைவு. |
| தனு | :- தேகசுகம் நன்று,பணவரவு,சுபகாரியங்களில் பங்கு, ஆடையாபரணங்கள் அணிவதில் மகிழ்ச்சி,களவு நிகழ்ச்சி, மகிழ்வு,கல்வி முன்னேற்றம்,வியாபார முன்னேற்றம். |
| மகரம் | :- தேகசுகம் நன்று,பணவரவு,எடுத்த காரியம் வெற்றி,நோய் நீக்கம்,எதிரி தலை குனிவு,கல்வி முன்னேற்றம்,வியாபார முன்னேற்றம். |
| கும்பம் | :- தேகசுகக்குறைவு, பணவரவு சமம்,பொது சேவையில் கௌரவக்குறைவு, பிரயாணத்தடை,கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| மீனம் | :- தேகசுகக்குறைவு, வைத்தியச்செலவு,மாதா சுகயீனம், வீண் அலைச்சல்,கல்வி சமம்,வியாபார முன்னேற்றம். |

# ரணில் நெருங்கிய சகாக்களுடன் ஆராய்வு; தேர்தல் பற்றி அடுத்த வாரம் முக்கிய முடிவு!



(கொழும்பிலிருந்து அருள்)

19வது அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக உயர்நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பையடுத்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஒரு வாரத்துக்குள் முக்கிய முடிவு ஒன்றை எடுக்கவுள்ளதாகத் தெரியவருகின்றது.

நீதிமன்றத்தீர்ப்புத் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் - உள்ள கட்சியின் முக்கியஸ்தர்கள், சட்ட நிபுணர்களுடன் ஆராய்ந்து வருகின்றார். நேரிலும், தொலைபேசி மூலமும் இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன.

இதையடுத்தே ஒரு வாரத்தில் ரணில் விக்கிரமசிங்க முக்கியமான தீர்வு ஒன்றை எடுப்பார் என ஐ.தே.க.வின் உயர் வட்டாரங்களில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

19ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமாயின் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்ததையடுத்து ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்றது. அத்துடன் இந்தத் தீர்ப்பு ஐ.தே.க. வின் சட்ட நிபுணர்களான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், கே.என்.சொக்ஸி ஆகியோரின் சட்ட நிபுணத்துவ ஆற்றலுக்குக் கிடைத்த பின்னடைவாகவே கருதப்படுகிறது.

இந்தப் பின்னடைவுகளை ஈடு செய்யத்தக்க முடிவு ஒன்றையே ரணில் 'விக்கிரமசிங்க எடுப்பார் எனத் தெரியவருகின்றது.

## தே. ஐ. மு. எம். பிகளும் பகிஷ்கரிப்பில் குதிப்பு

(கொழும்பு)

சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் எம்.பிகள் ஒன்பது பேர் பாராளுமன்றத்தை பகிஷ்கரித்து வருவதற்கு - ஆதரவு தெரிவித்து ∴பேரியல் அஷ்ரப் தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணி எம்.பிக்கள் மூவரும் நேற்றுமுன்தினம் முதல் பகிஷ்கரிப்பில் குதித்துள்ளனர்.

தே.ஐ.முன்னணியைச் சேர்ந்த பாயீஸ் முஸ்தபா, எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, சேகு இஸ்ஸாகுதீன் ஆகியோரே பாராளுமன்ற பகிஷ்கரிப்பில் தற்போது குதித்துள்ள ஏனைய மூவருமாவர்.

## பாராட்டு விழா

ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் வே.மாணிக்கன் யாழ். மாவட்ட சமாதான நீதவானாக நியமனம் பெற்றமைக்கான பாராட்டு விழா மருதனாமடத்தில் இயங்கும் மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தியாலயத்தில் நாளை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சோ.சேனாதிராசா, நமது ஈழநாடு நிர்வாக இயக்குனர் சி.சிவமகாராசா உட்பட பலர் கலந்து கொண்டு பாராட்டு வழங்குவர்.

## எந்தவொரு பொ.ஐ.மு. உறுப்பினரும் அரசாங்கத்துடன் சேரமாட்டார்களாம்!

### எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ நம்பிக்கை



பொதுஜன ஐக்கிய முன்னணியின் எந்தவொரு உறுப்பினரும் அரசாங்கத்துடன் சேரமாட்டார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

19ஆவது அரசியல் யாப்புச் சீர்திருத்த விவகாரத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி மிகவும் கவனமாக நடந்து கொண்டு வருகிறது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஏற்பாடு செய்துள்ள அரசாங்கத்துக்கு எதிர்ப்புத்' தெரிவிக்கும் கூட்டத் தொடரில் - முதலாவது கூட்டத்தை நுகேகொடையில் ஆரம்பித்து வைத்து அவர் உரையாற்றினார்.

அடுத்த மூன்றாண்டுகளுக்கு அரசாங்கத்துறைகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யாதிருப்பதற்கும் வெற்றிடங்களை நிரப்பாதிருப்பதற்கும் சர்வதேச நாணய நிதியத்தோடு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்றும் எதிர்ககட்சித் தலைவர் குற்றஞ்சாட்டினார்.

## பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன மீதான நம்பிக்கையில்லா தீர்மானம் விவாதத்தில்!



பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மீது நாடாளுமன்றில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விவாதத்துக்கு எடுப்பதற்கு விரைவில் நாள் ஒன்றை ஒதுக்குமாறு 5கட்சிகளின் தலைவர்கள் கையொப்பமிட்டு பிரதமருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, ∴பேரியல் அஷ்ரப், தினேஷ் குணவர்த்தன, விமல் வீரவன்ச, வண. பத்தேகம சமிந்த தேரரும் கையொப்பமிட்டுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சர் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை வேண்டுமென்றே தாமதப்படும் நிலை தோன்றுவதாக அக்கடிதத்தில் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அரசும் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்ட பின்னர் கிழக்கில் இடம்பெற்ற சில சம்பவங்கள் தொடர்பாக - உரிய நடவடிக்கை எடுக்கப்படாததால், பிரதேச மக்களின் பாதுகாப்புப் பற்றி அக்கறை செலுத்தவேண்டிய நிலையினால்தான் தம்மால் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டிருப்பதாக அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சார்க் உச்சி மாநாடு ஜனவரியில் பாகிஸ்தானில் நடக்கும்

சார்க் உச்சி மாநாட்டை எதிர்வரும் ஜனவரி மாதம் 11ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை நடாத்துவதற்கு பாகிஸ்தான் தீர்மானித்துள்ளது.

பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகரில் 13ஆம் திகதிவரை சார்க் உச்சி மாநாடு நடக்குமென அமர்வில் அங்கம் வகிக்கும் ஏழு நாடுகளுக்கும் பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

பாகிஸ்தானில் நடைபெறும் இந்த மாநாட்டில் இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் கலந்துகொள்வார் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## வீட்டின் மீது குண்டு வீச்சு பொலிஸ்காரர் ஒருவர் பலி!

(கொழும்பு)

தொடங்கொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிபிலவத்தை பகுதியில் நேற்றுமுன்தினம் வீடொன்றின் மீது குண்டு வீசப்பட்டதில் பொலிசார் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவத்தில் பலர் காயமடைந்ததுடன் வீடொன்று சேதத்துக்குள்ளாகியது.

வான் ஒன்றில் வந்த ஒருவரே குண்டு வீசித் தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மீண்டும் டெங்கு பரவும் ஆபத்து நாடு முழுவதும் அபாய எச்சரிக்கை!

(கொழும்பு நிருபர்)

நாட்டில் தற்போது நிலவுகின்ற காலநிலை மாற்றம் காரணமாக டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது பெய்து வரும் மழை மற்றும் ஈரப்பதன் காரணமாக டெங்கு நோயை பரப்பும் நுளம்புகள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே அனைவரும் விழிப்புடன் இருக்குமாறு சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஏற்கனவே அநுராதபுரப் பகுதியில் டெங்கு பரவுவது இனங்காணப்பட்டு இருப்பதாக சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் எச்சரித்துள்ளன.

## தரம் ஒன்பது பொதுப்பரீட்சைக்கு 31ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்

(மீசாலை)

தரம்9 மாணவர்களுக்கான மாகாணமட்ட பொதுப் பரீட்சைக்கான அனுமதிப் படிவங்களை இதுவரை பெறாத மாணவர்களை அவற்றைப் பெற்று பூர்த்தி செய்து இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பண்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (25)



பூநகரி, 4 ஆம் கட்டையில் இலவச தென்னங்கன்று வழங்கும் வைபவத்தில் - விவசாயி ஒருவருக்கு தென்னம் நாற்று கிளிநொச்சி மாவட்ட பொருண்மிய மேம்பாட்டுக்கழகப் பொறுப்பாளரால் வழங்கப்படுவதையும், அருகில் கிளிநொச்சி மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.தனிநாயகம் நிற்பதையும் படத்தில் காணலாம். (03)

## போதிய இருக்கைகளின்றி தெல்லிப்பளை வைத்தியசாலை

(பன்னாலை)

தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் சலரோக மற்றும் மெடிக்கல் கிளினிக்குக்காக வரும் நோயாளர்களுக்கு போதிய இருக்கை வசதிகள் இல்லாமையால் சுவர்க்கட்டுகளிலும், படிகளிலும், நின்ற நிலைகளிலுமே நோயாளர்களைக் காணக்கூடியதாகவுள்ளது.

இரு கிளினிக்குகளுக்கும் 120 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் வருவதாக வைத்தியசாலை வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. (72)

## சின்னஞ்சிறு செய்திகள்

### இறந்த நிலையில் கரையொதுங்கிய நீர்ப்பன்றி

(மணகும்பான்)

மண்கும்பான் வெள்ளை கடற்கரையில் இறந்த நிலையில் பெரும் நீர்பன்றி ஒன்று கரையொதுங்கியுள்ளது.

இதனை அதிகமான மக்கள் சென்று பார்வையிட்டு வருகின்றனர். பழுதடைந்த நிலையில் கரையொதுங்கியுள்ளதால் அப்பகுதியில் துர் நாற்றம் வீசிவருகிறது. (53)

### மென்பந்து நொதேன் கழகம் வெற்றி

உடுவில் மத்திய விளையாட்டுக் கழகம் யாழ்கோ லிமிட்டெட்டின் ஆதரவுடன் நடாத்திய மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகமும், நொதேன் விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் நொதேன் கழகம் 2 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. (72)

### பனையில் பனை நடுகை திட்டம்

அழிந்து வரும் பனை வளத்தை மீண்டும் பெருக்கும் நோக்குடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகமும் பனை அபிவிருத்திச் சபையும் இணைந்து மேற்கொள்ளும் பனை நடுகைத் திட்டம் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (80)

### குருத்துவ வாழ்வில் 25 ஆண்டு நிறைவு

(காங்கேசன்துறை)

அருட்திரு. பஸ்ரியாம்பிள்ளை இராசதுரை பிரான்சிஸ் பொனிபஸ் அடிகளாரின் குருத்துவ பணியின் 25 ஆண்டு நிறைவு இளவாலை புனித அன்னமாள் ஆலயத்தில் நாளை காலை 9 மணிக்கு நன்றித் திருப்பலியுடன் கொண்டாடப்படுகிறது.

1977 ஆம் அண்டு குருவானவராக திருநிலைப்படுத்தப்பட்ட இவர் தற்போது இளவாலைப் பங்கில் தனது மறைபரப்பு பணியை மேற்கொண்டுள்ளார். (71)

### கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர்களுக்கு

நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர்களுக்கான மாதாந்த பொதுக்கூட்டம் நாளைக் காலை 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

### தென்மராட்சி விவசாயிகளுக்கு

தென்மராட்சிப் பிரதேசத்தில் காலபோக விவசாயம் மேற்கொள்வோர் உரம் பெற விரும்பின், தமது விவசாய சம்மேளனத்தில் தமது விவசாயம் செய்யும் நிலப்பரப்பளவை உறுதிப்படுத்திய பத்திரத்துடன் நேரில் வருமாறு கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தர் சொ.சத்தியேந்திரன் அறிவித்துள்ளார். (25)

### புதன் தவிர்ந்த நாட்களில் லயன் எயார் 2சேவைகள்

லயன் எயார் விமான சேவை கடந்த 24ஆம் திகதி முதல் புதன் கிழமைகள் தவிர்ந்த ஏனைய நாட்களில் இரு சேவைகளையும் புதன் கிழமைகளில் காலைச் சேவையை மட்டும் நடாத்துகிறது என லயன் எயார் பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

### வெள்ளத்தில் இராணுவ காவலரண்கள்

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் வடக்கு, தெற்கு பகுதிகளில் இராணுவம் அமைத்துள்ள பதுங்கு குழிகளுக்குள்ளும் காவலரண்களுக்குள்ளும் மழைநீர் நிரம்பி இருப்பதைக் காணமுடிகின்றது.

இப் பதுங்கு குழிகளும், காவலரண்களும் சமாதான உடன்படிக்கைக்குப் பின்னர் இப்பகுதியில் அமைக்கப்பட்டவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (83)

# சேது சமுத்திரத் திட்டம் பற்றி புதுடெல்கியில் உயர்மட்ட ஆய்வு



(புதுடெல்கி)

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான பாக்கு நீரிணைப் பகுதியினை ஆழப்படுத்தும் சேது சமுத்திரத் திட்டம் குறித்து உயர் மட்ட ஆய்வுக் கூட்டம் நேற்று முன் தினம் புதுடெல்கியில் அமைச்சர் திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்றது.

இத்திட்ட ஆய்வுக்குழுவில் இந்தியக் கப்பல் துறை அமைச்சின் செயலாளர் எம்.பி.பின்டோ, மேற்படி அமைச்சின் மேலதிக செயலாளர் எம்.இராமச்சந்திரன் மற்றும் இந்திய சுற்றுச்சூழல் அமைச்சின் மேலதிக செயலாளர் வி.ராஜகோபாலன் உட்பட உயரதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இவ்வாய்வுக் கூட்டம் முடிவடைந்த பின்னர் பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் திருநாவுக்கரசு கருத்துத் தெரிவிக்கையில் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆய்வுக் கழகத்திடம் சேது சமுத்திர திட்டம் எவ்வாறு செயல்படுத்தப்பட வேண்டும் என ஆய்வு அறிக்கையை ஒரு வருடத்திற்குள் சமர்ப்பிக்குமாறு கடந்த மே மாதம் ஒப்படைக்கப்பட்டது. தற்பொழுது ஆறு மாத காலம் முடிவடைந்த நிலையில் இவ்வாய்வுக் கூட்டம் கூட்டப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

மேற்படி இடைக்கால ஆய்வுக் கூட்டத்தில் சேது சமுத்திர திட்டத்தினை அமுல்படுத்த சுமார் எழுநூறு மீற்றர் நீளத்திற்கும் இருநூறு மீற்றர் அகலத்திற்கும் சுமார் ஏழு மீற்றர் ஆழத்திற்கும் தோண்டப்பட வேண்டும் எனவும் அவ்வாறு செய்வதற்கு சுமார் இந்திய ரூபாய் இருநூறு கோடியில் இருந்து இருநூற்று முப்பது கோடி வரை தேவையாகும் என மதிப்பிடப்பட்டுள்ளதாக அறிக்கை மூலம் தெரியவருவதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

தற்பொழுது இலங்கையைச் சுற்றி கடல் போக்குவரத்துப் பாதை அமைவதால் 400கிலோ மீற்றர் கடல்ப்பயணத்தால் 36 மணி நேரம் அனாவசியமாக வீணாகுவதாகவும் இதனை மேற்படி சேது சமுத்திர திட்டத்தினால் தவிர்க்க முடியும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் சேது சமுத்திரத்திட்டத்தில் 7 மீற்றர் ஆழப்படுத்தினால் சிறிய கப்பல்கள்தான் செல்ல முடியும் எனவும் 9 மீற்றர் ஆழப்படுத்தினால் பெரிய கப்பல்களும் இப்பாதையூடாகப் பயணிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒன்பது மீற்றர் ஆழப்டுத்துவதாயின் சுமார் 400 கோடி இந்திய ரூபாயிலிருந்து 430 கோடி வரை நிதி ஒதுக்கீடு தேவையென அறியமுடிகின்றது.

## சீன நிலக்கரிச் சுரங்கத்தில் விபத்து

(பீக்கிங்)

சீனாவின் வடமாகாணம் சேஷ்யில் உள்ள நிலக்கரிச் சுரங்கமொன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் குறைந்தபட்சம் 15பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

மேலும் 29பேர் சுரங்கத்தில் சிக்கியுள்ளனர். இதுபோன்ற விபத்துக்களில் கடந்த வருடம் சீனாவில் 7 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

# காஷ்மீரில் பெண் முதல்வர் ஆட்சிக்கு வருகிறார் சுழற்சி முறையில் பதவியைப் பகிர இணக்கம்!

(புதுடெல்கி)

காஷ்மீர் தேர்தல் முடிவுகளில் எந்தவொரு அரசியல் கட்சிகளுக்கும் தெளிவான பெரும்பான்மை கிடைக்காததையடுத்து மாநில அரசியல் கட்சிகளுக்கிடையே ஆட்சியை அமைப்பது தொடர்பாக இருந்து வந்த இழுபறி நிலை முடிவுக்கு வந்துள்ளது.

தேர்தலில் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றிருந்த காங்கிரஸ் கட்சியும் மக்கள் ஜனநாயக கட்சியும் தங்களுக்கிடையே முதலமைச்சர் பதவியை ஏற்பது தொடர்பாக ஒரு இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளன. இதன்படி இரு கட்சிகளுக்கும் சுழற்சி முறையில் முதலமைச்சர் பதவியை ஏற்பது என்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில் முதல் வாய்ப்பு மக்கள் ஜனநாயக கட்சிக்கு அளிக்கப்பட்டுள்ளது. அக்கட்சியை சேர்ந்த இளம் தலைவி மெக்பூபா முதலமைச்சர் பதவியை ஏற்கவுள்ளார்.

எனினும் மெக்பூபா எவ்வளவு காலத்திற்கு முதலமைச்சர் பதவியை வகிப்பார் என்பது பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு காங்கிரஸ் கட்சியின் செயற்குழு கூட்டத்தில் மக்கள் ஜனநாயக் கட்சியை நிராகரித்து விட்டு காங்கிரஸ் ஆட்சி அமைக்க முடிவு செய்தது. இதனை தொடர்ந்து மெக்பூபா அவசர அவசரமாக சோனியா காந்தியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஏற்கனவே மன்மோகன்சிங் தெரிவித்த ஆலோசனைக்கேற்ப சுழற்சி முறையில் முதலமைச்சர் பதவி ஏற்க சம்மதித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இன்னமும் இரண்டு மூன்று நாட்களில் அரசு அமைக்க ஆவன செய்யுமாறு மாநில ஆளுநரிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

காஷ்மீர் மாநில சட்டசபையில் காங்கிரஸ் கட்சிக்கு இருபது உறுப்பினர்களும் மக்கள் ஜனநாயக கட்சியில் பதினாறு உறுப்பினர்களும் உள்ளனர்.

இது தவிர சுயேட்சை உறுப்பினர்கள் பதின்மூன்று பேரின் ஆதரவும் உள்ளது. எனவே காங்கிரஸ் மக்கள் ஜனநாயக கூட்டணியின் பலம் நாற்பத்தொன்பதாக உள்ளது. காஷ்மீர் சட்டசபை மொத்தமாக எண்பத்தேழு சட்டசபை உறுப்பினர்களைக் கொண்டது. இதில் நாற்பத்துநான்கு உறுப்பினர்களின் ஆதரவு பெரும்பான்மைக்கு போதுமானது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# மொஸ்கோவின் நாடக அரங்கில் தற்கொலையாளிகளின் பணயநாடகம்!

## சமரச முயற்சிகள் தோல்வியடையும் நிலையில்



**மொஸ்கோவின் அந்த நாடக அரங்குக்கு வந்திருந்த இரசிகர்கள், ஒரு பணய நாடகத்தின் அங்கமாக மாறியது மிகுந்த துரதிஷ்டமான விடயமாகும்.**

**அன்றய பொழுது ரஷ்யாவி லேயே மிகவும் ஜனரஞ்சகமான நகைச்சுவை நாடகமான நொட்- ஒஸ்ற (Nord - ost) அரங்கேறவிருந்தது. ஏறத்தாழ நூறு நடிகர்களும் இன்னும் பல பின்னணி இசைக் கலைஞர்கள், பாடகர்கள், உரைஞர்கள் ஆகியோர் பங்கு பற்றும் இந்த நகைச்சுவை நாடகத்துக்கு அன்று எழுநூற்றிப் பதினொரு நுழைவுச் சீட்டுக்கள் விற்பனையாகியிருந்தன.**

**நகைச்சுவை நாடகத்தைக் குலுங்கிக் குலுங்கிச் சிரித்து ரசித்துக் கொண்டிருந்த இரசிகர்கள், திடீரென இராணுவச் சீருடை அணிந்தோர் மேல் நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடி அரங்கில் காட்சி தந்ததைக் கண்டு திகைத்தனர்; ஓலமிட்டனர்; அல்லோலகல்லோலப்பட்டனர்; வெளியே தப்பித்து ஓட முற்பட்டனர்; சிலர் தப்பித்தனர் - ஆனால் நூற்றுக்கணக்கானோர் பணயக் கைதிகளாகினர். இப்படித்தான் அப்பணய நாடகத்தை மொஸ்க்கோ நாடக அரங்கில் அரங்கேற்றினர் செச்சினியத் தற்கொலைப் போராளிகள்.**



செச்னியாவின் தற்கொலைப் போராளிகள் அடங்கும் நாற்பது பேர் கொண்ட தீவிர ஆயுததாரிகள், மொஸ்கோவின் நாடக அரங்கு ஒன்றுக்குள் ஐநூறு பேருக்கும் மேற்பட்ட இரசிகர்களை பணயக் கைதிகளாகச் சுற்றி வளைத்துள்ளனர்; இந் அரங்கு முழுவதும் வெடிகுண்டுகளைப் பொருத்தியுள்ளனர். நாடகம் மூன்றாவது இரவாகத் தொடர்ந்தது.

நாற்பது பேர் கொண்ட ஆயுததாரிகளின் அணித்தலைவரான மொவ்சர் பெறயெவ், "மொஸ்கோவுக்குள் வந்திருக்கும் எங்கள் தற்கொலைத் தாக்குதல்காரர்கள் ஓடித்தப்பிப் பிழைக்க வரவில்லை; சாகத்துணிவுடனேயே வந்திருக்கிறார்கள்" எனத் தொலைபேசியில் ரஷ்ய அதிகாரிகளுக்கு எச்சரித்தார்.

நாடக அரங்குக்குள் வைக்கப்பட்டுள்ள கைதிகள் விடுவிக்கப்பட வேண்டுமெனில் செச்னியாவில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ரஷ்ய இராணுவம் வாபஸ் பெறப்பட வேண்டும் என்றும் அணித்தலைவர் மொவ்சர் நிபந்தனை விதித்துள்ளார்.

நாற்பது பேர் கொண்ட குழுவில் ஏறத்தாழ இருபது பேர் பெண் போராளிகளாக உள்ளதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர். இவர்கள் தமது உடல்களில்வெடிகுண்டுகளைப் பொருத்திய படி உள்ளனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர். ரஷ்ய இராணுவத்தால் தமது கணவன்மார் முன்பு கொல்லப்பட்டுவிட்டனர் என்று அப்பெண் தற்கொலையாளிகள் கூறினர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடக அரங்குக்குள்ளிருந்து கைத்தொலைபேசிகளைப் பயன்படுத்தி வெளியே தொடர்பு கொண்ட கைதிகள், தாங்கள் நன்றாகவே நடத்தப்படுவதாகத் தெரிவித்தார்கள். கைத்தொலைபேசிகள் அனைத்தும் தற்கொலைப் போராளிகளால் பின்னர் பறிக்கப்பட்டன எனவும் தெரியவந்தது. ரஷ்யத் தொலைக்காட்சிச் சேவையின் இரண்டு படப்பிடிப்புக் குழுக்கள் அரங்குக்குள் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர். உள்ளே பதிவு செய்யப்பட்ட காட்சிகள் ரஷ்யத் தொலைக் காட்சியில் நேற்று ஒளிபரப்பட்டன.

ட்ர்யானா சொல்னைஸ்கினா எனும் ஒரு பெண்கைதி, ரஷ்யப் பாதுகாப்புப் படைகள் தலையிட்டால் கைதிகளில் பலர் கொல்லப்படுவர் எனத் தெரிவித்தார்.

மற்றொரு கைதியான இருதய சிகிச்சை நிபுணர் மேரியா சொகொல்றிக்கொவா என்பவர், இப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு சர்வதேச நாடுகளின் தல்லயீடு அவசியம் என்றும் மனிதாபிமானம் மிக்க செய்தியாளர்கள் தலையிட்டுப் பணியாற்ற முடியும் என்றும் கூறினார்.

"கட்டிடங்களைச் சுற்றி வளைக்காதீர். மிகப் பாரிய தொகையான ஆயுதங்கள் வெடிபொருட்களைத் தரித்துக்கொண்டு தற்கொலையாளிகள் அரங்கிற்கு அருகிலும் உள்ளேயும் நிற்கின்றனர்", என்றும் அந்த நிபுணர் தெரிவித்தார்.

முதல் நாள் இரவு முழுவதும் இரண்டு ரஷ்ய அரசியல்வாதிகள் மத்தியஸ்த முயற்சிகளில் ஈடுபட்டிருந்தும் பலன் எதுவும் ஏற்படவில்லை. நேற்றுமுன்தினம் போதிய



தற்கொலைப் போராளிகளால் முதன்முதலாக விடுவிக்கப்பட்ட ஒரு குழந்தை.

ளவு குடிதண்ணீர், உணவு, போர்வைகள் ஆகியவற்றை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் அரங்குக்குள் அகப்பட்டுள்ளவர்களுக்கு வழங்குவதற்கு பேராளிகள் அனுமதியளித்தனர்.

தீயணைப்பு வாகனங்கள், அம்புலன்ஸ் வண்டிகள் என்பன அரங்குக்கு அருகில் ஆயத்த நிலையில் உள்ளன. அத்துடன் ரஷ்ய பொலிஸாருடன் ரஷ்ய இராணுவத்தின் விசேட பயிற்சி பெற்ற சினைப்பர் தாக்குதல் பிரிவினரும் அரங்கைச் சுற்றி நிலையெடுத்துள்ளனர். ரஷ்ய இராணுவத்தாங்கிகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

அதேவேளை, சுமுகமான முறையில் இந்த பணய நாடகத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக, ரஷ்ய அரசாங்க அதிகாரிகளுக்கும் தற்கொலைப் போராளிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் பேச்சுக்கள் ஆரம்பமாகின.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், ஜேர்மனி, போத்துக்கல், ஆகிய நாடுகளுக்கான தனது விஜயத்தை ரத்துச் செய்து கொண்டு, தன்னை முழுமையாக இவ்விவகாரத்திலேயே ஈடுபடுத்தியுள்ளார் எனத் தெரியவருகிறது. இப்பணய நாடகத்துக்கு வெளிநாடுகளில் இயங்கும் இஸ்லாமியத் தீவிரவாத சக்திகளே காரணம் என்றும் அல்கெய்டா இதில் சம்பந்தப்பட்டுள்ளது என்றும் புட்டின் கூறினார். மேலும் ரஷ்ய ஜனாதிபதியாக புட்டின் பொறுப்பேற்றபின் இடம் பெற்ற ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பல் விபத்தைத் தொடர்ந்து, அவர் எதிர் கொள்ளும் பாரிய சவால் நாடக அரங்கில் இடம்பெறும் இப் பணய நாடகமாகும் என ஊடகங்கள் தெரிவித்தன.

அமெரிக்க இராஜங்க அமைச்சர் கொலின் பவல், இத்துயரகரமான நிலைமை சமாதானமாகத் தீர்க்கப்படும் என்று நம்பிக்கை வெளியிட்டார்.

நேற்றுமுன்தினம் தற்கொலையாளிகளால் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர். பலவந்தமாக இவர்கள் உள்நுழைய முற்பட்டதாகத் தற்கொலையாளிகள் தெரிவித்தனர். மேலும் மனிதாபிமான அடிப்படையில் பலர் விடுவிக்கப்பட்டனர். நேற்றையதினம் பதின்மூன்று வயதுக்குட்பட்ட சிறுவர்களின் ஒரு தொகுதியினர் தற்கொலையாளிகளால் விடுவிக்கப்பட்டனர். அத்துடன் அமெரிக்கா, ஜேர்மனி ஆகிய நாடுகளின் ராஜதந்திரிகள் செச்னியப் போராளிகளுடன் தீவிர பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளனர். அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த 75 பேர் வரையிலான பணயக கைதிகள் விடுவிக்கப்படுவது தொடா பாகவே இப்பேச்சுக்கள் இடம்பெறுகின்

**- புவியரங்கன்.**

பணயக் கைதிகள் முழுப்பேரையும் விடுவித்தால், தற்கொலையாளிகள் பாதுகாப்பாக வெளிநாடொன்றுக்குத் தப்பிச் செல்வதற்குரிய பாதையை, தான் ஏற்பாடு செய்து தரமுடியும் என ரஷ்ய அரசாங்கம் ஏற்கனவே அறிவித்திருந்தது. ஆனால், தமது நிபந்தனைகளில் தற்கொலையாளிகள் மிகப் பிடிவாதமாக இருக்கின்றனர். மத்திய கிழக்கு விடயம் தொடர்பாக அமெரிக்காவின் இராஜதந்திர வியூகத்தைச் சமாளிக்கவேண்டிய புடினுக்கு பணயக்கைதிகள் நாடகம் திட்டமிட்டே வழங்கப்பட்ட ஒரு சுமையா?

## வார்த்தை விளையாட்டு - 04

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | ழு | | 2 | |
| | | 3 வா | | 4 |
| | | 5 கோ | | |
| | 6 | | ர் | பு |
| 7 | | | | |
| | 8 அ | | 9 | டி |

முழுப் பெயர் : ..........................................

கற்கும் பாடசாலை : ..........................................

கற்கும் தரம் : ..........................................

முகவரி : ..........................................

.............................. ..............................

கையொப்பம் திகதி

### இடமிருந்து வலம்

1. இலங்கையின் தலைநகர்.
3. ஒரு பறவையினம்.
6. பெண்.
7. சிறுவர்களின் விளையாட்டுப் பொருள்.
9. மின்னலும் இதுவும் சேர்ந்தே தோன்றும்.

### மேலிருந்து கீழ்

1. சில விலங்குகளின் தலையில் பாதுகாப்புக்காக இருப்பது.
3. யாழ். மாவட்டத்திலுள்ள ஒரு ஊர்.
4. தென்னையிலிருந்து பெறப்படும் ஒரு நார்ப்பொருள்.
5. ஒரு உணவுத் தானியம்.
8. தாய் (கீழிருந்து மேலாக).
9. நகை செய்யப் பயன்படுவது.

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட எவரும் பங்கு பற்றலாம்.

மேறகாணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில

**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய இறுதி நாள்:- 30-10-2002

சரியான விடை எழுதிய மூவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

## வார்த்தை விளையாட்டு - 3

சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசுபெறத் தெரிவுசெய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1ஆம் பரிசு -*
**துரைரட்ணம் சிந்துஜா**
மயிலியதனை,
தொண்டமனாறு.

*2ஆம் பரிசு -*
**சி.நிலோஜனா**
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

*3ஆம் பரிசு -*
**மாணிக்கராசா நாகவதனி**
ஸ்ரேசன் வீதி,
சுன்னாகம்.

## ஸ்ரீலங்காவின்...

முதற் பிரதமர் - டி.எஸ்.சேனநாயக்கா

முத்ல் ஜனாதிபதி - வில்லியம் கோபல்லாவ


முதல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி - ஜே.ஆர்.ஜெயவர்த்தனா

முதற் பெண் பிரதமர் - ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா

முதற் பெண் மாகாண முதலமைச்சர் - சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க


முதல் தேசாதிபதி - சேர்.ஒலிவர் குணதிலக.

ஆக்கம் -
சீ.பிரஷாந் - ஆண்டு 8



# சிறுவர் அரங்கம்

## கிளிக் கூடு



நாங்கள் மாமாவின் வீட்டுக்குப் போனோம். அங்கே கிளிக் கூடு இருந்தது. அது ஒரு சிறிய கிளிக்கூடு. அதற்குள் ஓர் அழகான கிளி இருந்தது. கிளி "வாங்க... வாங்க" என்று கூப்பிட்டது.

அண்ணா அதைப் பார்த்தார். ஒரு வாழைப்பழத்தைக் கொடுத்தார். அது சாப்பிடவில்லை. "வேண்டாம்... வேண்டாம்" என்று தலையாட்டியது.

நான் அதற்குக் கிட்டப்போனேன். அது அழுது கொண்டிருந்தது. "ஏன் அழுகின்றீர்கள்?" என்று கேட்டேன்.

"இதைப் பாருங்கள். இது ஒரு சிறிய கூடு... என்னால் பறக்க முடியவில்லை... நடக்க முடியவில்லை... என்னால் திரும்ப முடியவில்லை... நான் திரும்பும் பொழுது கூட்டில் உள்ள கம்பிகள் குத்துகின்றன" என்றது கிளி.

கிளியைப் பார்க்கப் பாவமாய் இருந்தது. மாமா வந்தார். கிளி சொன்னதை மாமாவிற்குச் சொன்னேன். மாமா கிளியைப் பார்த்தார். கூட்டைத் திறந்துவிட்டார். அது விர்.... என்று பறந்தது. சுற்றி வந்தது. "கீக்கீ" என்று கத்தியது.

அண்ணா பழத்தைக் கொடுத்தார். அதைச் சாப்பிட்டது. அக்கா பழத்தைக் கொடுத்தார். அது சாப்பிட்டது. நான் தானியத்தைக் கொடுத்தேன் அது சாப்பிட்டது. கிளி சிரித்தது. நானும் சிரித்தேன்.


**பேராசிரியர் சபா.ஜெயராசா**

## விகடத்திற்குப் பரிசு



ஒரு ஊரிலே நஸீா் எனும் விகடகவி வசித்து வந்தார். அவருக்குத் திருமணமாகி விட்டது. ஒரு மாரிகாலத்தில் அவ்வூரிலே பஞ்சம் ஏற்பட்டது. அவர் அவ்வூரை விட்டு வேறு ஒரு நாட்டுக்குச் சென்றார். அந்த நாட்டு அரசன் சங்கமான். சங்கமானை ஒருவராலும் சந்திக்க முடியாது. அரசகுரு நினைத்தால் மட்டுமே யாரானாலும் அரசனைச் சந்திக்கலாம். உடனே நஸீா் அரசகுருவைச் சந்தித்து தான் அரசனை பார்க்க வேண்டுமெனக் கூறினார்.

அரசகுரு நான் அரசனிடம் கூட்டிச் செல்கிறேன் என ஏமாற்றிக் கொண்டிருந்தார். இதைப் புரிந்துகொண்ட நஸீா், இவரிடம் கேட்டுப் பிரயோசனமில்லை எனத் தெரிந்து கொண்டார். உடனே அரசகுருவிடம், 'நானே அரசனைச் சந்திக்கிறேன், நீர் என்னைக் கூட்டிச் செல்ல வேண்டாம்' என கூறினார். இதற்கு அரசகுரு 'நீ அரசனைச் சந்திக்க முடியாமல் நான் செய்வேன்' என்றார். பின்னர் நஸீா் வீட்டுக்கு வந்து, அரசகுருவிடம் அரசனைச் சந்திப்பேன் என்று கூறி விட்டேன், எப்படி அரசனைச் சந்திப்பது என்று யோசித்தார். அவனது அதிர்ஷ்டம் அப்போது முரசு ஒலித்தது. 'அரசரின் 60ஆவது வயது நாளை முடிவடைகிறது எல்லோரையும் வரும்படி அரசர் கேட்டுள்ளார்.' என முரசு அறிவிக்கப்பட்டது.



அடுத்தநாள் நஸீா் அரச சபைக்குச் சென்றார். அங்கு ஒருவன் சாதனை புரிந்துகொண்டிருந்தான். அப்போது அவன் தன்னோடு போட்டியிட யாராவது வருவீா்களா எனக் கேட்டான். உடனே நஸீா் முன்சென்றான். அந்த வித்தைக்காரன் 'நீ என்னோடு போட்டியிட்டுத் தோற்கப்போகிறாய்' என்றான்.

அப்போது நஸீா் 'நான் கண்ணைமூடிச் செய்வதை நீ கண்ணைத் திறந்துகொண்டு செய்யமுடியுமா?' எனச் சவால் விட்டார். அதற்கு வித்தைக்காரன் சம்மதித்தான். உடனே நஸீா் தன் இரண்டு கைகளாலும் மண்ணை எடுத்து தன் கண்களை மூடிவிட்டு அதன் மீது வைத்தார். பின் கண்களைத் தண்ணீரால் கழுவினான். பின்னர் வித்தைக்காரனிடம் 'கண்களைத் திறந்து கொண்டு இதைச் செய்' என்றார்.

வித்தைக்காரன் இதை செய்ய முடியாது என்பதை உணர்ந்து தலைகுனிந்தான். அப்போது அரசன் நஸீரைப் பாராட்டிப் பொற்காசுகளைப் பரிசாகக் கொடுத்தார்.

**கா.சுபாங்கன்,**
**16-9, சீனியர்லேன்,**
**யாழ்ப்பாணம்.**

## இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :-
**திவ்யா வைத்தியநாதன்**
கற்கும் பாடசாலை:-
யா/அமிர்தாம்பிகை வித்தியாலயம்
சாவகச்சேரி
கற்கும் தரம்:- 5
ஆர்வமுள்ளதுறைகள்:-
*கலைத்துறை, விளையாட்டுத்துறை.*



முழுப்பெயர்:-
**கஜனினி பாலசுப்பிரமணியம்**
கற்கும் பாடசாலை:-
யா/இந்து மகளிர் கல்லூரி.
கற்கும் தரம்:- 6
ஆர்வமுள்ள துறைகள்:-
*சங்கீதம், கதைப்புத்தகம் வாசித்தல.*



முழுப்பெயர்:-
**சுதா சின்னையா**
கற்கும் பாடசாலை:-
வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி
கற்கும் தரம்:- 9
ஆர்வமுள்ள துறைகள்:-
*விளையாட்டு, பாட்டு, கட்டுரை, கவிதை.*



முழுப்பெயர்:-
**பிரணவி சிவதாஸ்**
கற்கும் பாடசாலை:-
யா/வேம்படி மகளிர் கல்லூரி
கற்கும் தரம்:- 6
ஆர்வமுள்ளதுறைகள்:-
கதைப் புத்தகம், பத்திரிகை வாசித்தல்



முழுப்பெயர்:-
**பிரதீபன் கிருஸ்ணபிள்ளை**
கற்கும் பாடசாலை:-
யா/மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
கற்கும் தரம்:- 8
ஆர்வமுள்ள துறைகள்:-
கணிதம், விஞ்ஞானம்

## கணினி

பகுதி 3


**சேரலாதன்**

**Analog Monitor** க்கும் **Digital Monitor** க்கும் இடையேயான வெளியில் தெரியும் வேறுபாடு, அந்த **Monitor** இல் இருக்கும் கட்டுப்



பாட்டு பட்டன்கள் (**Control buttons**) ஆகும். **Analog Monitor** இல் இருக்கும் **buttons** எல்லாம் நாம் கையால் திருகி மாற்றம் செய்யக் கூடியவை. **Digital Monitor** இல் உள்ள **buttons** மெதுவாக அழுத்தி **Monitor** இன் செயற்பாட்டை அல்லது படத்தின் தெளிவை மாற்றம் செய்யக் கூடியவை. அத்துடன் **buttons** ஐ அழுத்தும்போது **Screen** இல் நாம் செய்யும் மாற்றங்களின் அளவுகளைக் காட்டுவதற்கு அளவு காட்டிகள் காட்டப்படும். ஆனால் இன்று **Analog Monitor** கள் அருகி **Digital Monitor** களே பெரும் பாலும் பயன்படுத்தப்படுகின்றன.

**Monitor** கள் பொதுவாக இரு



வடிவங்களில் காணலாம். **TV** போல் பின்புறம் நீண்ட பெரிய **Monitors**, அல்லது தட்டையான அடக்கமான **Monitors (Flat Screen)**, **CRT (Cathode Ray Tube)** ஐ பயன்படுத்தும் **Monitors.** முன்னையவை **Laptop Monitors Flat Screen** ஐ உடையவை. இதில் **Liquid Crystal** என்னும் தொழில் நுட்பம் பயன் படுத்தப்படுகிறது. அத்துடன் விலை கூடிய **Monitor** உம் ஆகும்.

### கீ போர்ட் (Keyboard) மௌஸ் (Mouse)

இவை கணினியுடன் தொடர்பு கொண்டு கட்டளைகளை வழங்கும் சாதனங்களாகும். கீ போர்ட்டில் உள்ள **buttons,** ஒரு தட்டச்சில் உள்ள **buttons** ஐ ஒத்தது. அத்துடன் மேலதிகமாகவும் பல **button** களை யும் கொண்டுள்ளது.

கணினிச் சந்தையில் சாதாரண




அடிப்படைக் கீ போர்ட்கள் தவிர்ந்த வேறு ஆடம்பரமான கீ போர்ட்டுகளை யும் காணலாம். உதாரணமாக-ஸ்கானருடன் கூடிய கீ போர்ட், ரிமோட் கொன்றோலால் இயங்கும் கீ போர்ட் போன்றவை. இவை சாதாரண கீ போர்ட் இன் உபயோகத்தைவிட மேலதிகமாக சில வசதிகளைக் கொண்டவை.

மௌஸ் - ஒரு உள்ளீட்டுக் கருவியாகும். இதில் இரண்டு அல்லது மூன்று பட்டன்கள் இருக்கும். இதனடியில் உருளையான ஒரு பாகம் உள்ளது. மௌஸை ஒரு சீரான பரப்பில் அசைக்கும்போது இவ்வுருளை உருள்கின்றது. இவ் அசைவுக்கு ஏற்றவாறு மொனிட்டரில் ஒரு அம்புக்குறி அசையும். ஏதாவது ஓரிடத்தில் அம்புக்குறியை நிறுத்தி மௌஸின் **button** ஒன்றை அழுத்தினால், கணினி அம்புக்குறியின் இடத்தையும், அழுத்திய **button** ஐயும் கணக்கில் கொண்டு ஒரு கட்டளையை நிறைவேற்றும்.

**System Unit** :-

கணினித் தொகுதியின் பிரதான பாகம் இதுவே. இதற்குள்ளே கணி




னியின் மூளையான **CPU-Central Processing Unit, Mother board, Hard disk** போன்ற முக்கியமான பாகங்கள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும் **Floppy drive, CD drive, Sound card** போன்று வேறு பாகங்களுக்கும் இதுவே இடமளிக் கின்றது. மற்றைய புறச்சாதனங் களும் (**Peripheral Devices**) இதனுடனே இணைக்கப்பட்டிருக்கும்.

**System Unit** இரு வடிவங் களில் உள்ளன.

அவையாவன:-
1) **Desk Top** வடிவம்
2) **Tower** வடிவம்

இவற்றுள் **Tower** வடிவமே இன்று பிரபலமாயுள்ளது. இவ்வகை **System Unit** களில் அதிகமான சாதனங்களைப் பொருத்தும் வசதி களுள்ளது. (தொடரும்)

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இது தான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இளந்தேனீக்கள் கழகம்**
**சிறுவர் அரங்கம்**
**நமது ஈழநாடு**
**267,நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................................
கற்கும் பாடசாலை :..............................................
கற்கும் தரம் :..............................................
வீட்டு முகவரி :..............................................
பிறந்த திகதி :..............................................
ஆர்வமுள்ள துறைகள் :..............................................
:..............................................

............... ..............................
திகதி ஒப்பம்

............................ ..........................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## சார்ள்ஸ் டார்வின்

சார்ள்ஸ் டார்வின் இங்கிலாந்து நாட்டை சேர்ந்த இயற்கை விஞ்ஞானியாவார். அவர் எழுதிய "இயற்கைத் தேர்வின் காரணமாய் ஏற்பட்ட இனங்களின் தோற்றம்" (**The orign of species by means of Natural selection**) என்னும் நூலால் நன்கு பிரசித்தமானார். **H.M.S.** பீகிஸ் என்னும் கப்பலில் இயற்கை விஞ்ஞானியாக சாள்ஸ் டார்வின் 1832 ஆம் ஆண்டு தொடக்கம் 1836 ஆம் ஆண்டு வரை கடமை ஆற்றினார். சார்ள்ஸ் டார்வின் கூர்ப்புக் கொள்கை பற்றி முன்வைத்த கருத்து டார்வினை "கூர்ப்பின் தந்தை" என்ற நிலைக்கு உயர்த்தியது.

**செ.திருக்குமரன்**
**யா/யூனியன் கல்லூரி**

## புது யுகம் படைப்போம்



*துணிந்து வா நண்பா*
*நானும் நீயும் சேர்ந்து*
*புதுயுகம் படைப்போம்!*
*யுத்தங்கள் வேண்டாம்*
*நித்தமும் சிறகடிப்போம்!*
*சமாதான வானிலே*
*நம் கனவுகள் நனவாகட்டும்!*
*யுத்தமற்ற பூமியிலே - ஒரு*
*பூஞ்சோலை உருவாகட்டும்.*

**தி.லசிகா,**
**ஆண்டு:- 8,**
**யா/மகாஜனாக்கல்லூரி ,**
**தெல்லிப்பழை.**

## அழகு



நாட்டுக்கு அழகு வளமை
நாவுக்கு அழகு இன்சொல்
நீருக்கு அழகு சாந்தம்
கண்ணுக்கு அழகு கருமை

வானுக்கு அழகு விண்மீன்
முனிவர்களுக்கு அழகு தியானம்
பாட்டுக்கு அழகு இசை
மனிதர்களுக்கு அழகு பொறுமை

காற்றுக்கு அழகு மென்மை
கடலுக்கு அழகு அடக்கம்
மாணவர்களுக்கு அழகு ஒழுக்கம்.

**சித்தார்த்தன்,**
**ஆண்டு - 10,**
**யா/மத்திய கல்லூரி.**



நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*"வினை விதைத்தவன் வினை அறுப்பான்"*
-பழமொழி

# நமது நோக்கு

## வீட்டு வாசலுக்கே வரும் வெள்ளம்!

இலங்கைத் தீவில் ஏற்பட்ட யுத்த சூழலின் நேரடியான பாதிப்புக்கள் ஒருபுறமிருக்க, அதன் மறைமுகத் தாக்கம் இன்று பலதுறைகளிலும் பெருமெடுப்பில் வெளித் தெரிய ஆரம்பித்துள்ளது.

கடந்த இரண்டு தசாப்தங்களாக நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்கும், மக்களின் சுபீட்சமான, முன்னேற்றகரமான வாழ்க்கைக்கும் செலவிடப்பட்டிருக்க வேண்டிய பணத்தின் பெரும்பகுதி - போராயுதங்களைக் கொள்வனவு செய்யவும், ஆயுதப் படைகளைப் பராமரிக்கவும் திருப்பிவிடப்பட்டது.

நாட்டு மக்களின் அத்தியாவசிய தேவைகளான கல்வி, சுகாதாரம் போன்றவற்றுக்கு வந்து சேரவேண்டிய நிதி கூட - எவ்வித முன்யோசனையுமற்று - வெற்று வெற்றிப் பெருமிதங்களுக்காகவும், அரசியல் தளத்தைக் காத்துக் கொள்ளவும் - போர்க்களங்களில் கொட்டப்பட்டது.

கொள்வனவு செய்த கப்பல்களுக்கும் விமானங்களுக்குமான செலவீடு போக, மோசடியாகவும் பெருந்தொகைப் பணம் யுத்தத்தின் பெயரால் கையாட்ல் செய்யப்பட்டு, அவை இன்று வங்கிப் பெட்டகங்களிலும், இனந்தெரியாத சேமிப்புக் கணக்குகளிலும் நிறைந்து கிடக்கின்றன.

நாட்டை வளப்படுத்த வேண்டிய நேரத்தில், வீண் விரயமான இத்தகைய நிதியினால் - சிறிலங்காவின் பொருளாதாரம் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இது கடந்த ஆண்டுகளில் வெளித் தெரியவந்தாலும், இதன் நீண்டகாலத் தாக்கத்தின் பலன்கள் இப்போது - நேரடியாகவே நாட்டைக் குறிவைத்துத் தாக்கத் தொடங்கிவிட்டன.

அரசாங்கம் சந்தித்துள்ள வங்குரோத்து நிலையினால் - அரச திணைக்களங்களிலும், கூட்டுத்தாபனங்களிலும் புதிய நியமனங்கள் எதனையுமே மேற்கொள்ள வேண்டாம் என்ற நிலைக்கு அரசாங்கம் வந்திருப்பதும்,

நாடெங்கிலும் உள்ள 2000 சமுர்த்தி உத்தியோகத்தர்களை வேலையிலிருந்து நீக்குவதாக அரசு ஆலோசித்து வருவதான செய்தியும் - இதன் ஒரு சில வெளிப்பாடுகளேயாகும்.

இதைவிட - அரசாங்கத்தின் வசமிருந்த நிறுவனங்களையும், சேவைகளையும் தனியார் மயமாக்க வேண்டிய கட்டாயத்திற்கும், யுத்தத்தால் நலிந்த பொருளாதாரமே முக்கிய காரணம் என்பது வெளிப்படையானது.

கடந்த காலங்களில் - தமிழினத்தை அழித்தொழிக்கவும், அரசியல் இலக்குகளை நோக்கிய வீம்புப் போர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்- தலைப்பட்ட அரசியல் சக்திகள் விதைத்தவையே, இன்று அறுவடையாகிக் கொண்டிருக்கின்றன.

இது ஒரு ஆரம்பநிலை வெளிப்பாடேயன்றி, தாக்கங்களின் உச்சநிலை இதுதான் என்று வரையறுத்துவிட முடியாததும் இங்கு கவனிக்கத்தக்கது.

இங்கு ஒரு வேடிக்கை என்னவென்றால்- தனது ஆட்சிக் காலத்தில், தமிழர்களுக்கெதிரான மிகப் பாரிய இராணுவ நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்து விட்டும், அதற்கு முன் ஏற்பட்டிருக்காத போர்ச் செலவீனத்தை ஈட்டித் தந்தும், முழுத் தீவையுமே போரிற்குள் கொண்டு சென்றதுமான பொதுஜன ஐக்கிய முன்னணியும், அதன் தலைவர்களும் -

தாம் சம்பாதித்துக் கொடுத்த பொருளாதார நெருக்கடி பற்றி சிந்திக்கக் கூட மாட்டாமல் - ரணில் அரசாங்கம் செய்துவரும் தனியார் மயமாக்கல் பற்றியும், வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படுவது இடை நிறுத்தப்பட்டது பற்றியும் 'பலத்த கண்டனம்' தொடுப்பதுதான். அதைவிட 'இது மக்களை வெகுவாகப் பாதிக்கும்' என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

இந்த 'அரசியல் வேடிக்கைகள்' ஒருபுறமிருக்க, இதனூடான உள்ளார்த்தத்தை - சிங்கள மக்களும் அரசாங்கமும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

யுத்தத்தின் பாதிப்பு என்பது எவ்வளவு தூரம் நாட்டைக் குட்டிச் சுவராக்கும், இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கும் என்பதை உணர்ந்து கொள்ள இவையெல்லாம் எச்சரிக்கைகளே என்பது உணரப்பட வேண்டும்.

இதன்படி ஒரு வகையில் - தெற்கில் எழுந்த/ எழுந்து வருகின்ற அரசியல் கோமாளித்தனங்களினதும், செயலற்ற பேச்சுக்களினதும், இனவாதச் சிந்தனைகளதும் பாதை எப்படியிருக்கும் என்பதை சிங்கள மக்களுக்கு உணர்த்துவதற்கும், அம்பலப்படுத்துவதற்கும் கிடைத்த வாய்ப்புக்களாகவும் இந்த நெருக்கடிகளைக் கொள்ள[illegible] முடி[illegible]மல்லவா?

# வலி-வடக்கு இடம் பெயர்ந்தவர்களுக்கு 25 வீடுகளை யூ.என்.எச்.சி.ஆர் அமைக்கும்

(வலி. வடக்கு)

வலி.வடக்குப் பகுதி மக்களின் மீள் குடியேற்றத்துக்காக இளவாலைப் பகுதியில் 25 வீடுகள் அமைக்கும் வீட்டுத் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தின் ஆதரவில் அமைக்கப்படும் இவ் வீட்டுத் திட்டத்தில் ஒவ்வொரு வீடும் 17,000 ரூபா செலவில் கட்டப்படும்.

வலி.வடக்குப் பகுதியில் இருந்து அகதிகளாக வெளியேறிய மக்கள் இன்னமும் சொந்த இடங்களுக்கு திரும்பமுடியவில்லை. வசதிகளற்ற அகதிமுகாம்களிலும், கொட்டில்களிலும் வாழ்ந்து வரும் இம்மக்களை மீள்குடியேற்றம் செய்யுமுகமாக மேற்படி வீட்டுத் திட்டம் அமைக்கப்படவுள்ளது.

.5 லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்படவுள்ள இத் திட்டத்துக்கான திட்ட வரைபுகள் யாவும் தயாரிக்கப்பட்டு விரைவில் கட்டட நிர்மாண வேலைகள் ஆரம்பமாகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (105)

## வெடி விபத்தில் ஒருவர் காயம்

(அரியாலை)

தோட்ட வேலை செய்து கொண்டிருந்த வேளையில் நிலத்தில் இனம் தெரியாத பொருள் ஒன்றைக் கண்டு அதை மண்வெட்டியால் கிண்டி எடுக்க முற்பட்டவேளை அது வெடித்து சிறுவன் ஒருவன் கையில் படுகாயடைந்தான்.

தாவளை இயற்றாலை என்ற இடத்தில் இடம்பெற்ற மேற்படி வெடிவிபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த முருகுப்பிள்ளை சுதாகரன் (வயது 17) என்ற சிறுவனே கையில் படுகாயமடைந்து யாழ் போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். (55)

## திருமலை படுகொலைகள் விசாரணைகள் ஆரம்பம்

(திருகோணமலை)

திருகோணமலையில் நடைபெற்ற படுகொலைகள் சம்பவம் தொடர்பான நீதிமன்ற விசாரணை ஆரம்மாகியுள்ளது.

திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் மேற்படி சம்பவம் தொடர்பான வழக்கு கடந்த 23ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. திருகோணமலை மாவட்ட நீதிபதி எஸ். தியாகேந்திரன் முன்னிலையில் இவ்விசாரணை ஆரம்பமானது. இதன்போது மேற்படி சம்பவத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இரு இளைஞர்கள் சாட்சியமளித்தனர். இவர்களை விட உதவிப் பொலிஸ் அத்தியட்சர் ஒருவரும் சாட்சியமளித்தார்.

எதிர்வரும் 29ஆம் திகதி மீண்டும் இவ்வழக்கின் விசாரணை தொடர்ந்து நடைபெறும்.

### ஆறு வருடங்களாக

## பருத்தித்துறையில் மூடப்பட்டிருக்கும் இரு வீதிகளைப் படையினர் திறந்துவிடுவர்

(வடமராட்சி)

பருத்தித்துறை- கல்லூரி வீதி, சுப்பர்மடம் வீதி ஆகிய இரு வீதிகளும் இம்மாதம் இறுதிக்குமுன் மக்கள் பாவனைக்கு திறந்துவிடப்படவுள்ளாக படை வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது

கல்லூரி வீதியிலிருந்து கடற்கரைக்கு செல்லும் சுப்பர்மட வீதியினை மக்கள் பாவனைக்கு அனுமதிப்பதற்கு படை அதிகாரிகள் முடிவு செய்துள்ளதாக தெரியவருகின்றது.

இதற்கமைவாக இவ்வீதியிலுள்ள இராணுவ காவலரண்கள், முகாம் பகுதி, களஞ்சிய அறைகளை அப்புறப்படுத்தும் பணியில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

மாணவர்கள் இவ்வீதியை போக்குவரத்துக்கு திறந்து விடுமாறும், அருகிலுள்ள படை முகாம்களை அகற்றி சுதந்திரமான கற்றலுக்கான சூழலை ஏற்படுத்தக்கோரியும் போராட்டங்கள் நடத்தி வந்தமை தெரிந்ததே.

பருத்தித்துறை இராணுவ முகாம் பகுதி உயர்பாதுகாப்பு வலயம் எனப் படைத்தரப்பினரால் தெரிவிக்கப்பட்டு வரும் இவ்வேளையில்- பாடசாலை மாணவர்களின் கோரிக்கை வெளிநாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதன் அடிப்படையில் அண்மையில் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் ரொபேட் ஈவன், பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர் ஹரத் தோமஸ் ஆகியோர் விஜயம் செய்து பாடசாலை நிலைவரம் தொடர்பாக படையினருடன் சந்தித்துப் பேச்சு நடாத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (23)

## "சுகாதாரமும் குடிநீரும்" திட்டம் தயாரிக்க யுனிசெப் விசேட குழு யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

அடுத்த வருடத்தில் யாழ்.மாவட்டத்தில் 'சுகாதாரமும் குடிநீரும்' என்ற திட்டம் ஒன்றை தயாரிக்கும் முன்னேற்பாடாக 'யுனிசெப்' விசேட குழுவொன்று நேற்றுமுன்தினம் யாழ். அரசாங்க அதிபரைச் சந்தித்துள்ளது.

அடுத்த வருடம் யாழ். மாவட்டத்திற்கான சுகாதாரமான குடிநீரை எப்படி பெறுவது, எவ்வளவு குடிநீர் தேவை, எப்படி விநியோகம் செய்வது போன்ற குடிநீர் தொடர்பான பல்வேறு பிரச்சினைகளை தீர்க்கும் முகமாகவே "சுகாதாரமும் குடிநீரும்" என்ற திட்டத்தை 'யுனிசெப்' தயாரிக்கவுள்ளது.

இதற்கு முன்னேற்பாடாகவே 'யுனிசெப்' குழுவினர் நேற்று முன்தினம் அரச அதிபரைச் சந்தித்தனர்.

தயாரிக்கப்படவிருக்கும் இத்திட்டத்தை அடிப்படையாக வைத்தே 'யுனிசெப்' நிறுவனம் அடுத்த வருடம் குடிநீர் விநியோகம் தொடர்பான நடவடிக்கைகளை எடுக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## புளொட் உறுப்பினருக்கு நீதிமன்று தடுப்புக் காவல் உத்தரவு

(வடமராட்சி)

வீரசிங்கம் மண்டபத்துக்குள் நுழைய முயன்று கைது செய்யப்பட்டுக் காவலில் உள்ள புளொட் உறுப்பினர் ச.ஜெயச்சந்திரனுக்கு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தடுப்புக் காவல் உத்தரவு வழங்கியுள்ளது.

மேற்படி புளொட் உறுப்பினர் நெல்லியடியில் நடைபெற்ற கொலைச் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டமையால் ஏற்கனவே பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தால் இவருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. இதனால் இவர் நேற்றையதினம் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்தார். அடுத்த மாதம் முதலாம் திகதி இவரது வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

### மீளக் குடியேறிய

## வடமராட்சி மீனவருக்கு கடற்றொழில் உபகரணங்கள்

(வடமராட்சி)

வடமராட்சி பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த மீனவர் குடும்பங்களுக்கு கடற்தொழில் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

'மொலி மொண்டோ' என்ற சர்வதேச உதவி வழங்கும் நிறுவனம் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு உதவ முன்வந்துள்ளது.

வடமராட்சி பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களின் விவரங்களை இந்நிறுவனம் வடமராட்சி வடக்கு சமாசத்திடம் கோரியுள்ளது.

அதேவேளை- மீளக்குடியமர்ந்த குடும்பங்களின் விபரங்களை, கடற்தொழில் சங்கங்கள் எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் சமாசப் பணிமனையில் ஒப்படைக்குமாறு சமாசத்தின் தலைவர் க.சூரியமூர்த்தி கோரிக்கை விடுத்துள்ளார். (23)



# குறைதீர் மன்றம்

தற்போது புதிய பாடத்திட்டத்தில் க.பொ.த உயர்தரத்தைக் கற்றுக் கொண்டிருக்கும் நாம், பரீட்சைக்குத் தயார்படுத்திக் கொண்டிருக்கின்றோம். ஆனாலும் புதிய பாடத்திட்டத்தின் பிரகாரம் மூன்றாவது அமர்வாக பரீட்சையில் தோற்றலாமா? என்பது பற்றி தெளிவின்மையாக இருக்கின்றது. இதனைத் தெளிவுபடுத்தவும்.

க.சுரேஸ்,
சுன்னாகம்.

**நமது ஈழநாடு**

தங்களின் விடயம் தொடர்பாக கல்வித் திணைக்களத்துடன் 'நமது ஈழநாடு' தொடர்பு கொண்டபோது, புதிய பாடத்திட்ட முன்மொழிவுகளிலேயே உயர்தரத்தில் இரண்டு அமர்வுகளின் மூலம் மட்டுமே பல்கலைக்கழகம் புகமுடியும் எனக் கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் கல்வித்திணைக்களத்திற்கு அமைச்சிடமிருந்து மேற்படி விடயம் தொடர் பாக சுற்றுநிருபங்கள் எதுவும் அனுப்பப்படவில்லை. எனவே பல்கலைக்கழக அனுமதி தொடர்பில் மூன்று தடவைகளும் பரீட்சைக்கு தோற்ற முடியும் என்றும் பழைய முறையே நடைமுறையில் இன்றும் இருப்பதாகவும் கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் புதிய பாடத்திட்டத்தின் பிரகாரம் உயர்தர மாணவன் மாதாந்த ஒப்படைகள் பன்னிரண்டினை திருப்திகரமாக செய்திருப்பதாக அம்மாணவனின் பாடசாலை அதிபர் உறுதிப்படுத்தியிருக்க வேண்டியது மிகவும் அவசியமானது. அவ்வாறு அதிபர் உறுதிப்படுத்தியிருக்கும் பட்சத்தில் மாணவன் மூன்றாவது தடவையாக பரீட்சை எழுதி பல்கலைக்கழக புகுமுகத்திற்கு தகுதியுடையவனாகக் கருதப்படுவான் என அறிய முடிகின்றது.

# வடகொரிய அணுவாயுத அரசியல் விவகாரம்
# அமெரிக்க ராஜதந்திரத்தின் புதிய நகர்வாகும்


சீன ஜனாதிபதி ஜியாங் செமின்

கடந்த பல மாதங்களாக சர்ச்சைக்குரியதாக விளங்கிய ஈராக் விவகாரம் சற்றுத் தணிந்து வருவது போலவும், முடிந்த வாரத்தில் புதிதாக வடகொரிய விவகாரம் சூடு பிடித்துள்ளது போலவும் சர்வதேச அரசியல் காணப்படுகிறது.

சர்வதேச அரசியலில் உருவாகியுள்ள புதிய திருப்பம், வட-தென் கொரியாக்களை மட்டுமல்ல அமெரிக்க - வடகொரிய நெருக்கத்தை ஏற்படுத்துவது போன்றும் காணப்படுகின்றது. அமெரிக்க நிர்வாகம் ஈராக் விவகாரத்தில் எதிர்பார்த்த வேகத்தையும், இலக்கையும் அடைய முடியாத போக்கினைத் திசைதிருப்பும் வழியாக வடகொரிய விவகாரத்தை முதன்மைப்படுத்துவது போன்றும் தெரிகிறது.

அணுவாயுதம் பற்றிய அமெரிக்காவுடன் கொண்டிருந்த பகைமையைக் கைவிட வடகொரிய உடன்பட்டிருப்பது, கிழக்காசியா முழுவதும் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தும் விடயமாக அமைந்துள்ளது. இக்கட்டுரை அமெரிக்காவின் அணுகுமுறையையும், அதன் விளைவாக ஏற்படவுள்ள பாதிப்புக்களையும் பரிசீலிக்கின்றது.

1953களில் சித்தாந்த ரீதியான கருத்தியல் முரண்பாட்டினால் பிரிநத வட-தென் கொரியாக்கள், மிக நீண்ட காலமாக அம்முரண்பாட்டை செயல் வடிவமாக அமுல்படுத்திவந்தன. ஏறக்குறைய அரை நூற்றாண்டுகள் மோதலும், முரண்பாட்டுடனும் சித்தாந்தக் கருத்துக்களை கொண்ட நிலை - இப்பிராந்தியத்தில் இரு துருவ அரசியலை மேலெழச் செய்தது.


ஆனால் இப்பிராந்தியத்தின் இரு துருவ அரசியலானது சோவியத்துக்கும், அமெரிக்காவுக்கும் மட்டும் தனித்துவமானதல்ல. சோவியத்துடன் சீனாவும் கணிசமான செல்வாக்கை வடகொரியா மீது செலுத்தி வந்தது. சீனாவின் படைகளே வடகொரியாவின் மீதான அமெரிக்கப் படைகளின் பிடியை தளர்த்தியதுடன், வடகொரியாவின் எல்லை நிர்ணயத்தையும் சாதகமானதாக ஆக்கியது. அன்றிலிருந்து இன்றுவரை சீனா வடகொரியாவின் அரசியல், பொருளாதார, இராணுவ, கலாசார சித்தாந்தங்களில் நெருக்கமுடையதாக இருந்து வருகின்றது.

ஆனால் - தற்போது எழுந்திருக்கும் வடகொரிய - அமெரிக்க அபிவிருத்தியானது, சீனாவின் எதிர்காலத்தைப் பாதித்துவிடும் என்ற அச்சமும் பீக்கிங்கிற்கு ஏற்பட்டுள்ளது. அது ஒரு வகையில் நியாயமானதுமாகும்.

புதிதாக உருவாகியுள்ள விளையாட்டு அரசியல் (Sports Politics) ஆசியாவை உலகமயவாக்கத்திற்குள் உட்படுத்துவதிலும், அதன் வாயிலாக மேற்கின் ஊடுருவலை சாதகமானதாக அமைப்பதற்கும் வாய்ப்பைக் கொடுத்து வருகின்றது. ஜப்பான் - தென்கொரியா இணைந்து நடாத்திய உலக உதைப்பந்தாட்டத்திற்கான போட்டி, தென்கொரியாவில் நிகழ்ந்த ஆசிய விளையாட்டுப்போட்டி என்பன மிக அண்மைய விளையாட்டு அரசியலுக்கான உதாரணங்களாகும்.

ஆசிய விளையாட்டுப் போட்டியில் ஏற்பட்ட வட-தென்கொரிய நெருக்கம், அமெரிக்க நிர்வாகத்தின் ராஜதந்திரத்திற்கு கிடைத்த வெற்றியாகும். அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட மாற்றங்கள் வடகொரியாவும் - அமெரிக்காவும் 1994களில் எட்டிக் கொண்ட உடன்படிக்கையை பரஸ்பரம் அமுல்படுத்துகின்ற உத்தரவாதங்கள் தற்போது தென்கொரியாவுக்கூடாக பரிமாறப்படுகின்றன.

அமெரிக்க-வடகொரிய நெருக்கத்தைக் காட்டுவதற்கான நடவடிக்கைகளை தென்கொரியத் தலைவர்


அமெரிக்காவை எரிச்சல்படுத்தும் வடகொரியாவின் அணுவாயுத ஏவுகணை ஒன்று.

களே கையாண்டு வருகின்றனர் என்பதும் அதன் விருத்தித் தன்மையை மேலும் தெளிவுபடுத்தும். இது சீனாவின் பிராந்திய அரசியல் சமநிலைக்கு ஆபத்தானது.

ஏற்கனவே ஜப்பான், தென் கொரியா இரண்டும் அமெரிக்க செல்வாக்கு மிக்க சக்திகளாக விளங்குகின்றன. வடகொரியா மட்டுமே சீனாவின் நட்பு நாடாகவும், நெருக்கமான சக்தியாகவும் காணப்படுகிறது. அதனையும் சீனா இழக்குமாயின் எதிர்கால அரசியல் சக்தியாக எழுச்சி அடைய் முடியாது என்பது மட்டுமல்ல, படிப்படியாக சீனாவின் இருப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்படும். அதனால் அணுவாயுத வளர்ச்சிக்கு உதவிய சீனா தற்போது பொருளாதார உதவிகளை வடகொரியாவுக்கு வழங்க முன்வந்துள்ளதும்,

- தென்கொரியாவுடனான நெருக்கத்தில் வடகொரியாவின் கை ஓங்குவதற்கான வழிவகைகளைப் பற்றி ஆராய்ந்து வருவதாகவும் பிந்திய தகவல்கள் மூலம் அறிய முடிகிறது.

இந்தக் கத்திமுனை அரசியலில் சீனர்கள் வெற்றி பெறுவதென்பது நீண்ட பிரயத்தனத்துக்கும், காத்திருப்புக்கும் பின்னரே சாத்தியமாகும். ஆனால் இத்தகைய அரசியல் மேற்காசியாவில் இருந்து கிழக்காசியா நோக்கி உலக அவதானிப்பு திசை திரும்ப வாய்ப்பான சூழலாகும். ஒருவகையில் கூர்ந்து நோக்கினால் ஈராக்கும், வடகொரியாவும் சீனாவின் நட்பு நாடுகள் மட்டுமல்லாது, சீனாவின் எதிர்கால உலக அரசியலுக்கான அத்திவாரக்கற்கள் என்றே கூறலாம். எனவே - ஈராக்கைத் தாக்குவதும், வடகொரியாவை நோக்கி அமெரிக்கா அசைவதும் ஒன்றாகவே சீனாவுக்கு அமையும். ஈராக்கையும் விட, வடகொரியா சீனாவினது எல்லைப்புற நாடு என்ற வகையில் மேலும் அதிக ஆபத்தானதாக அமையும். எனவே சீனர்கள் விழித்துக் கொள்வது அவசியமானது.

இனி விடயத்திற்கு வருவோம்- ஒரு குறுகிய காலத்திற்கு முன்பு பயங்கரவாத அல்லது நாகரிகமற்ற என்று அழைக்கப்பட்ட வடகொரியாவுடன் அமெரிக்கர்கள் ஏன் அவசர அவசரமாக நட்புக் கொண்டாட முயலுகின்றார்கள் என்பது இங்கு பிரதான கேள்வியாகும். அதாவது எதிர்க்கும் நாட்டையோ, ஆட்சியாளனையோ அடித்து உதைத்து அழிக்கும் புஷ்ஷின் அமெரிக்கப்பாணி ஏன் மெதுவாக, சாதுரியமாக வடகொரியாவுடன் நெருக்கத்தை கடைப்பிடிக்க விரும்புகிறது?

வில்லியம் புஷ் பதவிக்கு வந்ததும் அமெரிக்கா பரிசோதித்த நட்சத்திரப் போர்முறையைக் கொண்ட NMD என அழைக்கப்படும் ஏவுகணையை பரிசோதித்த காரணங்களில் ஒன்றாக - வடகொரியாவின் நீண்ட தூர ஏவுகணை பரிசோதனையின் வெற்றி இருந்தது என்று புஷ் கூறியிருந்தமை கவனிக்கத்தக்கது. அப்படியாயின் - புஷ் தலைமையிலான அமெரிக்க நிர்வாகத்தின் அணுகுமுறையில் ஏற்பட்ட மாற்றத்திற்கான உண்மைக் காரணம் எது என்பதைச் சற்று விரிவாக நோக்குவோம்.

புஷ் நிர்வாகத்திற்கு உடனடியாகவும் அவசியமாகவும் தேவையாக அமைந்திருப்பது மேற்காசியாவில் ஏற்பட்ட நெருக்கடிக்குத் தீர்வு வேண்டும் என்பதாகும். உலக அரசுகளின் கவனத்தை திசைதிருப்பி சர்வதேச வல்லரசு அமெரிக்கா என்பதை நிறுவுவதற்கு முயன்றதன் வெளிப்பாடாக வடகொரியா விவகாரம் விளங்குகின்றது. ஈராக் மீது உடனடியாக போர் தொடுக்க முடியாத தோல்வியை மறைக்க இன்னோர் இலக்கை அமெரிக்கா கண்டுபிடித்துள்ளது.

இரண்டாவது - ஈராக் மீதான அனுபவம் ஏனைய தனது எதிரிகளை கையாளும்போது சுமுகமாகவும், அமைதியாகவும் நடவடிக்கைகளை மேற்கொண்டு இலக்கை இறுதியில் நிறைவு செய்கின்றதென்ற அணுகுமுறையைப் பின்பற்றுவது. அதாவது- புஷ் நிர்வாகத்தின் வெளிநாட்டுக் கொள்கையில் சமாதானம் என்ற கோஷம் பிராந்தியத்திற்கு பிராந்தியம் வேறுபட்டதாக அமையும். ஆனால் சமாதானமான உலகத்தை உருவாக்குவதென்பது இறுதியில் அவ்வரசை அல்லது பிராந்தியத்தை அமெரிக்கமயமாக்குவதாகும். அந்த அடிப்படையில் ஏற்பட்டிருப்பவற்றுள் வட-தென்கொரிய இணக்கமும் ஒன்றாகும்.

மூன்றாவது-பொருளாதார தேவையைக் கருத்தில் கொண்ட போக்காகும். உலகமயமாக்கத்தை கிழக்காசியாவுக்குள் முழுமையாகப் பரவலடையச் செய்வதென்பதில் அமெரிக்கா இதுவரை வெற்றி காணவில்லை. அதற்குச் சீனாவுடன் கூட்டுச் சேர்ந்துள்ள வடகொரியாவும் ஒரு காரணமாகும். சீனா உலகமயமாக்கத்தை உள்வாங்கியது என்னவோ உண்மைதான். ஆனால் தனது கொள்கைக்கு ஏற்பவே அச்சீர்திருத்தங்களை அமுல்படுத்தி வெற்றி கண்டு வருகிறது. இதேநிலையிலேயே வடகொரியாவை சீனா உருவாக்க முயலுகிறது. அதனைத் தோற்கடிப்பதுடன் சீனாவின் கிழக்காசியப் பொருளாதார வாய்ப்புக்களுக்கு ஆபத்திழைப்பது என்பது அமெரிக்காவின் மிகப் பிரதான நோக்கமாகும்.

நான்காவது-ராஜதந்திரப் போர் முறைமைக்கு ஊடாக வடகொரியாவை சின்னாபின்னப்படுத்துவது. குறிப்பாக - அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரான கொன்டோலா ரய்ஸ், வடகொரிய விவகாரம் தொடர்பாக, சி.என்.என்இற்கு தெரிவிக்கும்போது, ராஜதந்திர ரீதியான அரசியல் அணுகுமுறையையே அமெரிக்கா மேற்கொண்டு வருகின்றது என்றார். இது அமெரிக்காவின் அணுகுமுறையை கோடிட்டுக் காட்டுவதற்குப் போதுமானது. வடகொரியாவுக்குள் நுழைந்து அதன் பலமான நிலைகளை பல வீனமாக்கி, வறுமைச்சுமையை பலப்படுத்தி இறுதியில் தென்கொரியாவுடன் இணைப்பதே அமெரிக்காவின் நோக்கமாகும். இதனை கிழக்கு-மேற்கு ஜேர்மனி இணைவின்போது அமெரிக்கா கையாண்டு வெற்றி பெற்றதென்பது கவனிக்கத்தக்கது.

ஐந்தாவது- முழு இஸ்லாமிய உலகத்தையும் எதிர்த்துப் போரிடும் போது, ஏனைய பிராந்திய சக்திகளை இணக்கப்பாட்டுக்குள் வைத்திருப்பதும், சுமுகத்தன்மையை பேணுவதும் வல்லரசுகளின் இயல்பான அணுகுமுறையாகும். அதற்கு மிகப் பொருத்தமான பிராந்தியம் கிழக்காசியாவாகும். ஏனெனில் அங்குள்ள அனைத்து அரசுகளிலும் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக உள்ளனர் என்பது மட்டுமன்றி பல நாடுகளில் இஸ்லாமியரே இல்லாத நிலைமையே உண்டு. மஞ்சள் (மொங்கோலியர்) இனத்தவரே ஆளும் இனமாக உள்ளனர். 'பச்சைப் பயங்கரவாதிகளை' (இஸ்லாமியர்) தோற்கடிக்க 'மஞ்சள் பயங்கரவாதிகளை' நண்பர்களாக்கும் அணுகுமுறையை அமெரிக்கர்கள் தற்போது பின்பற்றி வருகின்றனர். இறுதியில் அமெரிக்கர்களின் அமெரிக்க மயவாக்கத்திற்கு எதிரான எல்லோருமே பயங்கரவாதிகளாக தென்படுவார்கள் என்பதே யதார்த்தமாகும். அப்போது மஞ்சள் இனத்தவரும் பயங்கரவாதிகள் ஆகிவிடுவார்கள் என்பதே தற்போதைய உலக ஒழுங்கின் பிரதிபலிப்பாகும்.

எனவேதான்-அமெரிக்க நிர்வாகத்தின் தற்போதைய அசைவு, ராஜதந்திர ரீதியான அணுகுமுறையைக் கொண்டிருக்கிறது. இத்தந்திரத்தைப் பயன்படுத்தி வடகொரியாவை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தால் சீனாவுக்கு நெருக்கடி அதிகமாகும் என்பதே அமெரிக்கர்களின் கணிப்பீடாகும். ஏற்கனவே சீனாவுக்கான மேற்குவாசல் அடைபட்டுவிட்ட நிலையில் அதிக பொருளாதார வாய்ப்புக்களை இழந்துவருகிற சீனா கிழக்கு வாசலும் அடைக்கப்பட்டால் அதன் எதிர்காலம் மங்கிவிடும் என அமெரிக்கா எதிர்பார்க்கின்றது.

**கே.ரி.கணேசலிங்கம்**

இங்கு கருதப்படும் மேற்கு வாசல் என்பது ஆப்கானிஸ்தான் ஊடாக சாத்தியமடைந்து கொண்டிருந்த மேற்கு ஆசியாவுடனான உறவே ஆகும். அமெரிக்கப் படையெடுப்பினால் அது ஸ்தம்பித்துப் போனது. அது சீனாவின் பொருளாதார, இராணுவ, வாய்ப்புக்களை மேற்காசியாவிலிருந்து அன்னியப்படுத்தியதுடன் மேற்காசியாவினூடாகக் கிடைத்த



அமெரிக்க ஜனாதிபதி புஷ்

பொருளாதார, இராணுவ வருமானத்தையும் கட்டுப்படுத்திவிட்டது.

சீனர்களே பாரிய கப்பல்களை உருவாக்கும் திட்டமிடல் உருவாவதற்கும் இதுவும் ஒரு காரணமாகும். ஆனால் சீனா எந்தளவுக்கு தனது இழப்பீட்டை பாரிய கப்பல் போக்குவரத்தினாலும், கடற்படையினாலும் சாத்தியப்படுத்திக் கொள்ளும் என்பது சந்தேகத்திற்குரியது. சீனர்கள் ஆப்கானிஸ்தானை கோட்டை விட்டதுபோல் வடகொரியாவையும் கைவிடுவார்களாயின் ஆபத்தான விளைவைச் சீனர்களே அனுபவிக்க நேரிடும்.

சீனாவிடம் இவை தொடர்பாக சற்று வேறுபட்ட பார்வை ஒன்று காணப்படுகிறது. அதாவது இவை யாவற்றையும் சீனா இழந்தாலும் பொருளாதார பலத்தை தக்கவைத்துக் கொள்ளுமாயின், எதிர்கால சர்வதேச அரசியல் சீனாவுக்கு பிரகாரமானதாக அமைந்திருக்கும் என்பதாகும். அதற்காகவே WTOவில் சீனா இணைந்து கொண்டதும் பொருளாதார பலத்தை தக்க வைக்க முயன்றதன் விளைவாகவே அமைகின்றது. அது ஏறக்குறைய சரியான விவரணமாகவே அமைந்துள்ளது. ஏனெனில்- பொருளாதாரப் பலத்தை தேடிக்கொள்வதும் மூலதன திரட்சி சாத்தியப்படுவதும் சீனாவின் வளர்ச்சிக்கு அவசியமானதாக அமையும்.

ஆனால் அரசியல் பலம் முற்றாக அகன்று போகாமலும் தனது அயல் பிரதேசங்களின் இருப்புக்கள் தகர்ந்து போகாமலும் பாதுகாக்கப்படுவது தற்காப்பானது. சிலவேளைகளில் எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறான போக்கு, அமெரிக்காவுக்கோ மேற்குலகுக்கோ சாத்தியமாகுமாயின் பொருளாதார நெருக்கடிகள் மட்டு


வடகொரியத் தலைநகர் பியாங்யாங்கிலுள்ள அரசுத் தலைவர் மாளிகை.

மன்றி அரசியல் பலவீனமும் முற்றாக சீனாவை தகர்த்துவிடும்.

பொருளாதார மறுசீரமைப்புக்காகவே சோவியத்யூனியன் திறந்துவிடப்பட்டது. சோவியத்தின் பொருளாதார மீட்சிக்காக கொர்பச்சேவ் கிழக்கு ஐரோப்பிய நாடுகளை முதலில் தளர்வடையச் செய்தார். ஆனால்- அது திடீரென சூறாவளி வேகங் கொண்டு ரஷ்சியாவின் குடியரசுகளையே அடித்துச் சென்றது. அவ்வாறான நிலை ஏற்படாது பார்த்துக் கொள்வதே சீனர்களுக்கு பொருத்தப்பாடானது. எனவே- வடகொரிய விவகாரம் உலகத்தின் கவனத்தை திசைதிருப்பும் நாடகம் மட்டுமல்ல. அது நீண்டகால இலக்கைக் கொண்ட ராஜதந்திர நகர்வும் கூட, அமெரிக்கர்களின் நகர்வை கண்டறிந்து அதனை முறியடிப்பது. சீனர்களுக்கு மட்டுமல்ல ஆசியர்களுக்கே இலாபகரமானதாகும். ✸


வடகொரியாவின் இரண்டாம் நிலைத் தலைவர் கிம் ஜெங் நாம் உடன் தென்கொரிய ஒருங்கிணைப்புக் குழு அமைச்சர் ஜியோங் சி ஹுன்.


# இரத்தக்கறை படிந்த ஒரு மொழியைப் பேசுபவனாக நான் வெட்கப்படுகின்றேன்

தமிழ்க்கூடல் நிகழ்வில் 'சிங்களப் பத்திரிகைகளின் போக்கு' பற்றி உரையாற்றிய ஹிரு சிங்களப் பத்திரிகை ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த ரோஹித பாசன அபேவர்த்தனவின் உரை இது

தமிழில்:- சுவாமி

**இறுதிப்பகுதி**

புலிகள் இயக்கம் எப்போதும் போர் மனநிலையில் உள்ளனர் என்பது அனைவருக்கும் தெளிவாகத் தெரியவேண்டுமென உதாரணத்திற்கு இதனைக் கூறினராம். இக்கட்டுரையானது பத்திரிகைகளின் சிரிப்பூட்டக் கூடிய துணுக்கு அல்ல. பாரதூரமான அரசியல் கருத்தாகும். இந்த பத்திரிகையிலே இதற்கு 4, 5 கிழமைகளுக்கு முன் பாதுகாப்பு நிலவரம் தொடர்பான கட்டுரை ஒன்று வெளிவந்திருந்தது. அக்கட்டுரையின் தலையங்கம் 'பெண் புலிப்போராளிகளுக்கு தேனீருக்குப் பதிலாக இரத்தம்'



83 ஜூலை 23ஆம் திகதி

என்பதாகும். பாருங்கள் இனவாதத்தை.

'லங்கா' என்பது கொழும்பில் இருந்து வெளிவரும் இன்னொரு வார இறுதிப் பத்திரிகையாகும். அதில் ஒரு கட்டுரை ஆசிரியர் சமீபத்தில் வடக்குப் பிரதேசத்திற்கு வந்து திரும்பி கட்டுரைத் தொகுதி ஒன்று எழுதியுள்ளார். அதில் ஒரு கட்டுரையின் தலையங்கம் 'வேகமாகச் சென்றால் உதைக்கிறார்- புலிகளின் பொலிஸில் இருந்து மிரட்டல்' என்பது ஆகும். அதில் கூறும் சம்பவம் இவ்வாறு உள்ளது.

ஓமந்தைச் சோதனைச் சாவடியினைத் தாண்டிய பின் எல்.ரி.ரி.ஈ கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் பயணம் செய்யும்போது - வீதி ஒழுங்கு தொடர்பான பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் அவ்வாகனத்தை நிறுத்தியுள்ளார். அத்துடன் வேகமாகச் சென்று பிடிபட்டால் உதைக்கப்படுவீர்கள் என புலிகளின் அந்தப் பொலிஸ் கூறினார் என அக்கட்டுரை தெரிவித்தது.

ஒரு சாதாரண அறிவுள்ளவருக்குக்கூட இதில் பிழை உண்டு எனத் தெரியும். காவல்துறை **Fine** அடிக்கும் எனக் கூறியிருக்க முடியும். சிங்கள மொழியின்படி 'பயின்' என்பது உதைப்பது ஆகும்.

எனவே- காவல்துறையினர் தண்டப்பணம் அறவிடப்படும் என்று சொன்னதையே பத்திரிகையில் உதைக்கப்படும் என்ற கருததில் எழுதியுள்ளார் அக் கட்டுரையாளர். கட்டுரையில் எந்த இடத்திலும் ஆங்கில '**Fine**', சிங்கள 'பயின்' என்ற சொற்களில் உள்ள கருத்துக்களைத் தெளிவுபடுத்தவில்லை. இச்செய்தியை வாசிப்பவர்க்கு - வேகமாகச் சென்றால் உதைப்பார் என்ற தகவலே சென்றடையும். எமது ஊடகங்கள் இவ்வாறு உள்ளன. செய்திகளை உற்பத்தி செய்வது என்பது இதுதான். மக்களினுடைய மனப்பான்மையை உருவாக்கும் நோக்கத்தில் செய்திகள் உருவாக்கப்படுகின்றன.

யுத்தத்தில் யதார்த்தம் என்ன என்பது பற்றி தெற்கில் உள்ள சிங்கள மக்கள் அறிவது இல்லை. யுத்தம் தொடர்பாக ஊடகங்களினால் உற்பத்தி செய்யப்படும் யதார்த்த நிலையை மாத்திரம் தெற்கில் உள்ள சிங்கள மக்கள் அறிவதுண்டு. யுத்தம் மிகவும் உச்சக்கட்டத்தில் நடைபெற்ற கடந்த 7 வருடங்களில் தமிழ் பேசும் மக்கள் வசிக்கும் பிரதேசத்தில் நடந்த எந்தவொரு கொடுமையையும் தெற்கிலுள்ள பிரதான தளத்தில் உள்ள ஊடகங்கள் சிங்கள மக்களுக்கு வெளிப்படுத்தியிருக்கவில்லை.

1997ஆம் ஆண்டில் 'ஹிரு' சஞ்சிகையில் நாங்கள் பத்திரிகைப் பயங்கரவாதம் என்ற தொனிப்பொருளில் பிரதான கட்டுரையைப் பிரசுரித்தோம். யுத்தத்துடன் தொடர்புடைய சில சம்பவங்களை- தெற்கிலுள்ள சிங்கள மொழியில் வெளிவரும் ஐந்து பத்திரிகைகள் தமது ஊடகங்களில் அறிவித்துள்ள விதம் பற்றி அக்கட்டுரையில் எழுதினோம். அதில் இரு உதாரணங்கள் மாத்திரம் உங்களுக்குக கூற விரும்புகிறேன்.

1995ஆம் ஆண்டு யூன் மாதம் 9ஆம் திகதி நவாலி சென்.பீற்றேர்ஸ் ஆலயத்தின் மீது விமானத்தாக்குதல் நடத்தப்பட்ட போது 131 பேர் உயிரிழந்தனர். இந்தசம்பவம் தொடர்பான புகைப்படங்கள் 'ஹிரு' மற்றும் 'ராவய' பத்திரிகைகளில் மாத்திரமே வெளிவந்தன. யூலை மாதம் 16ஆம் திகதி 'லங்கா



என்றும் தணியாத இனவாதம்

தீப' பத்திரிகை அது பற்றி இவ்வாறு எழுதியுள்ளது-

முன்னேறிப்பாய்தல் இராணுவ நடவடிக்கையின்போது விமானப் படைகளால் வடக்கில் இலக்கு வைத்து புலிகளின் முகாமை நோக்கி குண்டுகள் வீசப்பட்டபோது ஏற்பட்ட தவறுகளே சர்வதேச மட்டத்தில் அரசாங்கத்தினைச் சிக்கலான நிலைக்குக் கொண்டு வரும் பிரசாரத் தந்திரோபாயமாக பாவித்துக் கொண்டு இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் தவறு என்று சொல்வதற்கு என்ன இருக்கிறது? 131 பேர் விமானத்தாக்குதலால் உயிரிழந்தது ஆகும். அந்தப் பத்திரிகையிலேயே. வெளிவந்த இன்னொரு கட்டுரையில் இவ்வாறு எழுதியிருந்தது- தவறு அன்று கவனமின்மை. இராணுவப் படைகள் நடாத்திய தாக்குதலின் போது நவாலி சென்.பீற்றேர்ஸ் ஆலயத்திற்கு சேதம் ஏற்பட்டு மனித உயிர்கள் அழிந்திருக்கலாம். ஆயினும் அயோத்தியாவில் வரலாற்று முக்கியத்துவமுள்ள இஸ்ஸாமியப் பள்ளிவாசல் இடித்து நொருக்கப்பட்டது போன்ற சம்பவங்கள் இந்த நாட்டில் பெரும்பான்மை மக்களால் இதுவரை செய்யப்படவில்லை எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதுதான் பத்திரிகைகள் கொலைகள் மேற்கொள்ளும் வழிமுறை.



83 ஜூலை 24ஆம் திகதி

மேற்குறிப்பிட்ட சம்பவம் தொடர்பாக ஒரு சுயாதீனமான அறிக்கைக்காக 'திவயின' பத்திரிகை சிறிய இடத்தைக்கூட ஒதுக்கவில்லை. அரசாங்கத்தின் அறிக்கைகளுக்கும், செஞ்சிலுவைச்சங்கத்தின் அறிக்கைகளுக்கும் மாத்திரம் இடம் ஒதுக்கியது. ஆயினும், அதற்கு மிகச் சமீபநாட்களில்- அதாவது, ஆகஸ்ட் 22ஆம் திகதி பத்திரிகையில்- ஜெருசலேமிலும், மொறோக்கோவிலும், தென்கொரியாவிலும், இந்தியாவிலும் நிகழ்ந்த ,உயிரிழப்புக்களுக்கு பெரியளவிலான இடம் ஒதுக்கியிருந்தனர். அந்த உயிரிழப்புக்கள்- புகையிரத விபத்துக்கள், சூறாவளி, வெள்ளப்பெருக்கு ஆகியவற்றினால் நடந்தவை ஆகும்.

யாழ்ப்பாணத்தில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் கிருஷாந்தி குமாரசாமி என்ற மாணவியின் கொலை தொடர்பான உதாரணத்தை எடுத்துக் கூற விரும்புகின்றேன். 11 பேரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்ட கிருஷாந்தியின் கொலை தொடர்பாக பிரதான பத்திரிகைகள் செய்தி வெளியிடவில்லை.

ஆயினும்- கமல் அத்தாராச்சி எனும் ஒரு சினிமா நடிகனால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட யுவதி தொடர்பான செய்திக்கு- 1993 ஆகஸ்ட் 30ஆம் திகதியில் இருந்து ஒரு கிழமை வரை 'லங்காதீப' பத்திரிகை 465 செ.மீ பந்திகளை ஒதுக்கியது. ஆகஸ்ட் 30ஆம் திகதியில் இருந்து செப்ரெம்பர் 3ஆம் திகதிவரை அதற்காக 'திவயின' பத்திரிகை 77 செ.மீ பந்திகளை ஒதுக்கியது.

அதற்குரிய காரணம் என்ன? கிருஷாந்தி குமாரசாமியின் கொலைக்கு, தெற்கில் சந்தை இருந்திருக்கவில்லை. ஆயினும் ஒரு சினிமா நடிகனால் ஒரு யுவதியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட செய்திக்கு சந்தை வாய்ப்பு இருந்திருந்தது.



மறக்கமுடியாத கறுப்பு ஜூலை

கம்யூனிஸ்ட் நாடான போலந்தில் பொலிஸ் காவலின் போது இறந்த "செரி பொபிலெஸ்கோ" என்ற பாதிரியாரின் மரணமும், இலத்தீன் அமெரிக்காவில் அரச பயங்கரவாதத்தால் இடையிடையே கொல்லப்பட்ட சமயப் பிரதிநிதிகள் 100 பேருடைய மரணங்களையும் ஒப்பிட்டு ஒரு கருத்துக் கூறப்படுகின்றது. அதன்படி போலந்துப் பாதிரியாரின் மரணம் தொடர்பாக கம்யூனிஸ்டுகளுக்கு எதிரான நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகையும், நியூஸ்வீக் சஞ்சிகையும், சி.பி செய்திச் சேவையும் 129 நிகழ்ச்சிகள் மற்றும் செய்திகள் வெளியிட்டன

அதன்படி பொபிலெஸ்கோ பாதிரியார் பெறுமதியுள்ள இழப்பாகும் (**worthy victim**). மற்றவர்கள் பெறுதியற்ற இழப்பாகும் (**unworthy victim**). தமிழ் மக்கள் தொடர்பான தெற்கில் உள்ள ஊடகங்களின் கணிப்பின்படி தமிழ் மக்கள் என்பது பெறுமதியற்ற இழப்புகளாகும்.

எனவே- ஒரு சினிமா நடிகனால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட யுவதி பெறுமதியுள்ள இழப்பாகும். கிருஷாந்தி பெறுமதியற்ற இழப்பாகும். இந்த சினிமா நடிகர் சிலகாலங்களுக்குப் பிறகு சிறையில் இருந்து விடுதலை பெற்று வந்த பின் அவர் தன் வாழ்க்கையில் சந்தித்த துன்பதுயரங்கள் பற்றி சுவாரசியமான கட்டுரைகள் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவந்தன. கொழும்பிலுள்ள ஊடகக்கலை இவ்வாறானதாகும். உங்களை உற்சாகப்படுத்தும் ஒரு கதையல்ல நான் கூறியது.

பனைவேலி பற்றியும் தென்னை மரம் பற்றியும் கதைத்தும் போலித்தனமான கற்பனைவாத (**Romantic**) இலக்கியத்திற்கு கொடுத்த முக்கியத்துவத்திற்கு, கடந்த இரு தசாப்த காலமாக நீங்கள் முகம் கொடுத்த எந்தவொரு அழிவுக்கும் நாங்கள் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. யுத்தம் தொடர்பான கசப்பான உண்மை இதுவாகும்.

ஒழுங்கு விதிமுறை பற்றியோ, மனிதாபிமானம் தொடர்பாகவோ, மனச்சாட்சி எதுவும் கொழும்பில் உள்ள பல ஊடகங்களில் இல்லை. சந்தைக்கேற்றபடி வழங்கலை மேற்கொள்வதும், சிங்கள ஏகாதிபத்திய சிந்தனையையுமே காண முடிகிறது. நிலையான சமாதானத்திற்குத் தேவையான அந்நியோன்னிய உதவி மனப்பான்மையை கட்டியெழுப்பும் பணிக்கு எதிரான பெரும் இடையூறை- தெற்கிலுள்ள பல சிங்கள மற்றும் ஆங்கில ஊடகங்கள் செய்து கொண்டே இருக்கின்றன. அதற்குத் தேவையான மனப்பான்மைகளை உற்பத்தி செய்வது அவற்றின் பிரதான செயற்பாடாகும்.

எனது 10 வருட ஊடகத்துறையின் அனுபவங்களும்- அதில் 8 வருடங்களில்'ஹிரு' பத்திரிகையில் எங்களுக்கு கிடைத்த அனுபவங்களும் ஒன்றைத் தெளிவுபடுத்துகின்றன. தெற்கில் உள்ள சாதாரண மக்களின் மனநிலையில் மாற்றம் செய்யகூடியவகையில் செய்ய வேண்டிய செயல்களில் முதலாவது கட்டம்- இந்தக்கொடூரமான ஊடகக் கொள்கைக்கு எதிராக முகம் கொடுக்கக்கூடிய பலமுள்ள மாற்றுத் தகவல் பரிமாறும் ஊடகங்களைக் கட்டி எழுப்புவதும் அவற்றினைப் பலப்படுத்தலும் ஆகும்.

நியாயத்தினைப் பெற்றுக் கொள்ள நாங்கள் சேர்ந்து செய்ய வேண்டியவை பலவுள்ளன. அழிக்கப்பட்ட உங்களுடைய தலைநகரான யாழ்ப்பாண நகரத்திற்கு நாங்கள் வந்திருப்பது இந்த ஒட்டுமொத்த அழிவிற்கு பாத்திரமானவர்கள் என்ற வகையில் ஒழிய, கோழைத்தனமான சமாதானப் பறவைகள் என்ற ரீதியில் அல்ல. நீதிக்காக நாங்கள் சேர்ந்து செயற்பட வேண்டியவற்றைப் பற்றிய இந்த வேண்டுகோள் என்பது குற்றமுள்ள மனசாட்சி உள்ள மனிதன் என்ற வகையில் என்னால் இங்கு முன் வைக்கப்படுகின்றது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# வடக்கு கிழக்கு புனர்வாழ்வுக்கு உலகவங்கி 50லட்சம் டொலர் உதவி

(யாழ்ப்பாணம்)

வட-கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவிருக்கும் புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்கென ஐம்பது லட்சம் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்குவதற்கு உலக வங்கி முன்வந்துள்ளது.

மேற்படி நிதியைப் பயன்படுத்தி வட-கிழக்குப் பகுதிகளில் மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் மேற்கொள்படவுள்ளன.

கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டின்போது உலகவங்கியிடமிருந்து பெறப்படவிருக்கும் மேற்படி நிதியை எவ்வாறு பயன்படுத்துவது என்று ஆராயப்பட்டது. வட-கிழக்கின் அனைத்துப் பகுதிகளிலும் அவசியமாக மேற்கொள்ளப்படவேண்டிய பல புனர்வாழ்வுப் பணிகள் உள்ளன என்றும், இதற்கு பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்றும் அரசாங்க அதிபர்கள் பலர் வேண்டுகோள் விடுத்ததையடுத்து மேற்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது.உலக வங்கியின் மேற்படி நிதியைப் பயன்படுத்தி உடனடியாக செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான பணிப்புரைகள் வட-கிழக்குப் பகுதியின் அனைத்து மாவட்ட அரச அதிபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிதி உதவி கிடைத்ததைத் தொடர்ந்து புனர்வாழ்வுப் பணிகளின் வேகம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

# க.பொ.த. உயர்தர மாணவருக்கு ரி.என்.என். பொதுஅறிவுப்போட்டி

(நமது நிருபர்)

மூன்று வருடங்களாக ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் வசிக்கும் தமிழ் மக்களுக்கு, பல்வேறுபட்ட பொழுது போக்கு நிகழ்ச்சிகளுடன் தமிழ்மக்களின் பாரம்பரிய கலைகலாச்சார விழுமியங்களை எடுத்து விளக்கிய ரி.ரி.என் தொலைக்காட்சி (தமிழ் டெலிவிஷன் நெற்வேர்க்) குடாநாட்டில் முதற் கட்டமாக நவம்பர் 6ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்.வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களிடையே பொது அறிவுப் போட்டி ஒன்றை நடத்த ஒழுங்கு செய்துள்ளது.

அறிவியல் ரீதியானதும் பொருளாதார ரீதியில் உதவக்கூடிய வகையிலும் சுமார் 3 இலட்சம் பெறுமதியான பணப்பரிசில்களை மாணவர்கள் பெறுவதற்கு இப் போட்டி மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எதிர்வரும் காலங்களில் இது போன்ற பல நிகழ்ச்சிகளை நடாத்தி ஒவ்வொரு துறைசார்ந்தவர்களின் வளர்ச்சிக்கு பொருளாதார ரீதியிலும் பலம் கொடுக்கவுள்ளோம் என ரி.ரி.என் நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

நிகழ்ச்சி பற்றி அவர்கள் மேலும் கூறுகையில்-

துறைசார் வல்லுனர்கள், அறிஞர்கள், கலைஞர்கள், படைப்பாளிகள் அனைவரையும் நாம் அரவணைத்துச் செல்லவுள்ளோம்.

முதற்கட்டத்தில் யாழ்.கல்வி வலயம் மூலம் 1500 மாணவர்களின் விண்ணப்பங்களை ரி.ரி.என் தொலைக்காட்சி பெற்றுள்ளது. க.பொ.த (உ/த) 2004 ஆம் ஆண்டுப் பிரிவில் கற்கும் மாணவர்களின் விண்ணப்பங்களில் இருந்து 208 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு பொது அறிவுப் போட்டிக்கு அனுமதிக்கப்படுவர்.

ஏழு சுற்றுக்களாக நடத்தப்படும் இப் போட்டியின் முதற் சுற்றிலிருந்து விலகும் 104 மாணவர்களுக்கு தலா 100 ரூபாவும், இரண்டாம் சுற்றிலிருந்து விலகும் 52 மாணவர்களுக்கு தலா 200 ரூபாவும், 3வது சுற்றிலிருந்து விலகும் 28 மாணவர்களுக்கு தலா 400 ரூபாவும், நான்காவது சுற்றில் இருந்து விலகும் மாணவர்களுக்கு தலா 1000 ரூபாவும் பரிசாக வழங்கப்படவுள்ளது.

5வது சுற்றில் இருந்து விலகும் 8 மாணவர்களுக்கு தலா 3000 ரூபாவும், 6வது சுற்றிலிருந்து விலகும் 4 மாணவர்களுக்கு தலா 5000 ரூபாவும், 7வது சுற்றிலிருந்து விலகும் மாணவர்களுக்கு தலா 10000 ரூபாவும் பரிசாக வழங்கப்படவுள்ளது.ள

இறுதிச் சுற்றில் போட்டியிடும் மாணவர்களில் இரண்டாமிடத்தைப் பெறுபவருக்கு 50 ஆயிரம் ரூபாவும், முதலாமிடத்தைப் பெறும் மாணவருக்கு ஒரு லட்சம் பரிசாக வழங்கப்படவுள்ளது.

இந்தப் போட்டி நிகழ்வுகள் ஒளிப்பதிவு செய்யப்பட்டு ரி.ரி.என் தொலைக்காட்சி மூலம் ஒளிபரப்பப்படவுள்ளதாகவும் ரி.ரி.என் தொலைக்காட்சி நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர். இப்போட்டிகள் குடாநாட்டின் ஏனைய கல்வி வலயங்களிலும் விரைவில் நடாத்த ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

# பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழான 75 வழக்குகள் வாபஸ்

(கொழும்பு)

பயங்கரவாத் தடைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருந்த 75 வழக்குகளை சட்டமா அதிபர் கமலசபேசன் வாபஸ்பெற்றுக் கொண்டுள்ளார். ஒப்புதல் வாக்கு மூலத்தை ஆதாரமாகக் கொண்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்ட சந்தேக நபர்களே இவ்வாறு வழக்குகளில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வழக்குகளில் 50 வழக்குகள் வடக்கு-கிழக்கு மேல்நீதிமன்றங்களில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளாகும். ஏனைய 25 வழக்குகளும் கொழும்பு மற்றும் வேறு நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டவையாகும்.

ஆயினும் குண்டு வெடிப்புகள், துப்பாக்கிச்சூடு என்பவற்றுடன் தொடர்புடைய சந்தேகநபர்களின் வழக்குகள் எதுவும் வாபஸ் பெறப்படவில்லை.

### அரியாலை,கொழும்புத்துறை, பாசையூர் மற்றும் தென்மராட்சி

# மக்களை மீள்குடியேற்ற வசதியாக படைநிலைகளை விலக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கு வசதியாக படைநிலைகள் சிலவற்றை விலக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இவ்விடம் தொடர்பாக யாழ்.செயலகத்தில் நேற்ற மிக முக்கிய கூட்டம் ஒன்று நடைபெற்றது. யாழ். அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் உயர் இராணுவ அதிகாரிகள் சிலரும் பிரதேச செயலர்களும் கலந்து கொண்டனர்.

அரியாலை, கொழும்புத்துறை, பாசையூர் போன்ற யாழ்.நகரை அண்டிய கரையோரப் பிரதேசங்கள் மற்றும் தென்மராட்சி ஆகிய பகுதிகளில் மக்களின் மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்துவது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. இதற்கு வசதியாக பொதுமக்களின் வசிப்பிடங்களிலிருந்து படையினரின் நிலைகளை விலக்கிக்கொள்வது குறித்தும் ஆராயப்பட்டது. படைநிலைகள் பலவற்றை விலக்கிக்கொள்ள வேண்டிய அவசியம் குறித்து படை அதிகாரிகளிடம் எடுத்துக்கூறப்பட்டது. அத்துடன் இப்பகுதிகளில் காணப்படும் உயர் பாதுகாப்பு வலயம் குறித்தும் அதில் மாற்றங்களைச் செய்வது குறித்தும் ஆராயப்பட்டது.

அடுத்த கட்டமாக மேற்படி பகுதிகளை இந்த வார முற்பகுதியில் நேரடியாகச் சென்று பார்வையிட்டு மாற்றம் செய்யப்பட வேண்டிய படைநிலைகள் குறித்து தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. இதற்காக அப்பகுதியின் பிரதேச செயலர்களும் படை அதிகாரிகளும் குறிப்பிட்ட பகுதிகளை நேரடியாக சென்று பாாவையிட தீர்மானித்துள்ளனர்.

எனினும் கடற்கரையில் இருந்து உள்நோக்கி சுமார் 100 மீற்றர் தூரம் தொடர்ந்தும் உயர் பாதுகாப்பு வலயமாகவே பேணப்பட வேண்டும் என்று படை அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர். (க)

# தனது ஆதரவை வழங்க ஜனாதிபதியின் 3 நிபந்தனை

(கொழும்பு)

தமது மூன்று நிபந்தனைகளை ரணில் அரசு நிறைவேற்றினால் மட்டுமே அந்த அரசுடன் தாம் இணங்கிப் போக முடியும் என ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார். நேற்று மாத்தறையில் நடைபெற்ற புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு பேசும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்

தாய்லாந்து பேச்சுக்களின் போது புலிகளுக்கு அரசு என்னென்னவற்றை வழங்கப் போகின்றது, எவற்றை கொடுக்காமல் மறுக்கின்றது என்பவற்றைத் தெளிவாக கூற வேண்டும். தனியார் மயமாக்கலை அரசு கைவிட வேண்டும், அரசியல் பழிவாங்கலை நிறுத்த வேண்டும் என்பவையே ஜனாதிபதி சந்திரிகா விதித்துள்ள நிபந்தனைகளாகும்.

## மூன்று ....

நாடுகள், நிறுவனங்கள் என்பன கூட்டு நடவடிக்கைச் செயலணிக் கூடாகவே நிதியுதவியைச் செய்யும் என்றும், முன்னுரிமையளிக்க வேண்டிய விடயங்களை இனங்காணல், திட்டமிடல், அமுலாக்கல், மேற்பார்வையிடல் போன்ற சகல விடயங்களுக்கும் கூட்டு நடவடிக்கைச் செயலணியே நேரடிப் பொறுப்புடையதாக இருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இரண்டாவதாக- தாய்லாந்தில் பேசப்படவுள்ள விடயம், போர் காரணமாக இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியேற்றுவது தொடர்பான படிமுறைகளைப் பற்றியதாக அமையும்.

போர் நிறுத்தத்தை அமுலாக்கம் செய்யும் நடைமுறைகளை வலுப்படுத்துகின்ற விடயங்கள் தாய்லாந்தில் பேசப்படவுள்ள மூன்றாவது முக்கிய விடயமாகும் எனவும்,

நாட்டில் தற்பொழுது நிலவுகின்ற அரசியல் சூழ்நிலை, நடைபெறுகின்ற சமாதானப்பேச்சுக்கள் தொடர்பான நடவடிக்கைகள் எவ்வகையிலும் மாற்றத்திற்கு உட்படுத்தாது என்றும் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெளிவுபடுத்தினார்.

2001ஆம் ஆண்டு டிசம்பரில் இடம்பெற்ற பொதுத்தேர்தல் மூலமாக மக்கள் தமக்கு சமாதானத்துக்கான ஆணையை வழங்கியிருக்கிறார்கள் என்றும் சமாதானத்துக்கான ஆணையை முன்னெடுத்துச் செல்வதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் தமக்கு ஒத்துழைப்பை நல்கவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

வியாழக்கிழமை இரவு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இரண்டு ஜனாதிபதித் தேர்தல்கள் ஊடாக தனக்கு மக்கள் அளித்துள்ள ஆணையை நிறைவேற்றுவதற்கு சகல கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டிருந்தார். அது பற்றி பீரிஸிடம் செய்தியாளர்கள் கேட்ட போது -

'ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு மக்களால் தெளிவான ஆணை வழங்கப்பட்டுள்ளது. மற்றொருவர் கூறும் மாற்றுயோசனைகளுக்காக எமக்கு மக்கள் தந்த ஆணையை நாம் கைவிடமுடியாது' என்று பதிலளித்தார் ஜி.எல்.பீரிஸ்.

## கடற்படை.....

றமடைந்திருந்தனர். இது குறித்துக் கேட்டபோதே கடற்படையினர் பயிற்சியை மேற்கொண்டதாகவும் அது தொடர்பாகத் தமக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை எனவும் கூறினார்.

தாம் கடற்படை அதிகாரிகளுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விசாரித்த பின்னரே தமக்குத் தெரியப்படுத்தப்பட்டதாகக் கூறிய கண்காணிப்புக் குழுப் பிரதிநிதி, முன்னறிவித்தல் இன்றி நடத்தப்படுகின்ற இத்தகைய பயிற்சிகள் பொதுமக்களை பீதியடையச் செய்யும் என்பதையும் ஏற்றுக் கொண்டார்.

## கூட்டு...

கிய புலிகளின் நகர்வுகளுக்கு அடித்தளமாக அமையும் என ஜே.வி.பி யின் முக்கியஸ்தர்கள் பரவலாக பொதுக்கூட்ட மேடைகளிலும் கருத்தரங்குகளிலும் விமர்சித்து வருவது தெரிந்ததே.

# ஜனாதிபதியை அடிக்கடி தொடர்பு கொள்ளும் அமைச்சர்

## இணக்க நிலை ஏற்படுத்த முயற்சி

(கொழும்பிலிருந்து அருள்)

ஐக்கிய தேசியக்கட்சியின் சிரேஷ்ட தலைவரும் அமைச்சருமான கரு ஜெயசூரிய சகவாழ்வு அரசியல் ஒன்றை நடாத்தும் முகமாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் நேரடியாகவும் தொலைபேசி மூலமாகவும் கலந்து பேசியுள்ளார்.

ரணில் தலைமையிலான அமைச்சரவையில் கரு ஜயசூரிய சிரேஷ்ட அமைச்சராக இடம் பெற்றுள்ள போதிலும், ரணிலுடன் பல விடயங்களில் முரண்பட்ட கருத்துக்களை அவர் கொண்டிருப்பதால் இக்கலந்தாலோசனைகள் 'அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தவை என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

## அரச தரப்பு...

கொட்டேகொட இடம்பெறுவார். வவுனியாப் பிராந்தியத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்துக்குப் பொறுப்பாக அவர் தற்போது பணியாற்றுகிறார்.

மேலும் சமாதான செயலகத்தைச் சேர்ந்த ஜோன் குணரட்ணாவுடன் சனக ஜெயசேகராவும் வளஆளணிக்குழுவில் இடம்பெறுகின்றனர்.

விண்மீன் அங்காடி
விண்மீன் விவசாய சேவை

சகல கிருமிநாசினிகள் உர வகைகள், தெளிகருவிகள், சகல விதை வகைகளுக்கும் சகலராலும் நாடும் நிறுவனம்.

பிரதான வீதி,
நெல்லியடி.

யா/ யாழ் இந்து மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்க
பொதுக்கூட்டம்

03.11.2002 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00மணிக்கு கல்லூரி மண்டபத்தில் பழைய மாணவருக்கான பொதுக்கூட்டம் நடைபெறும். இக் கூட்டத்திற்கு அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

* உறுப்புரிமை பெறாத பழைய மாணவர்களும் அன்றைய கூட்டத்தில் கலந்து உறுப்புரிமையைப் பெறமுடியும்

(022) - செயலாளர்

## நாணய மாற்று விகிதம்

இலங்கை மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அந்நியச் செலாவணிகளுக்கான நாணய மாற்று விகிதங்கள் தொடர்பான விபரம் வருமாறு-

| | கொள்வனவு விலை (ரூ.ச) | விற்பனை விலை (ரூ.ச) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 95.97 | 96.48 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 147.84 | 149.13 |
| 1 யூரோ | 93.45 | 94:46 |
| 1 சுவிஸ் பிராங் | 63.60 | 66.41 |
| 1 அவுஸ்ரேலிய டொலர் | 52.75 | 53.57 |
| 1 ஜப்பானிய யென் | 00.76 | 00.77 |
| 1 சவூதி றியால் | 25.67 | 25.67 |

இப்பத்திரிகை - இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 26.10.2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.